சகல மின்சாரஉபகரணங்கள்
மின் மோட்டர்கள்
குளிர்சாதனப் பெட்டிகள்
S. Lon லைப் - Fitting
Jaffna Electricals
94 (6) Stanley Road,
JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை
ரூ. 1-50

யாழ்நகரில்
முன்னணி
மின்சார
ஒப்பந்தக்காரர்களும்
விநியோகஸ்தர்களும்
JAFFNA ELECTRICALS
94 (6) Stanley Road,
JAFFNA.

சுடர் 2: யாழ்ப்பாணம் பிரபவ ஞூ புரட்டாதி மீ 01 உ. வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 22 (17 – 09 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 252

இன்று அல்லது நாளை திடீர் திருப்பம் ஏற்படலாம்

# இடைக்கால நிர்வாக சபை

# விவரம் வெளியிடப்படும்

## புலிகளுக்கு 51 வீதமும்

### ஏனைய சகலருக்கும் 49 வீதமும்

### பிரதிநிதித்துவம் தர இந்தியா ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 17

இன்று அல்லது நாளை புதிய திருப்பம் ஒன்று ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்ப் போராளிகள் ஏற்கும் விதத்தில் அமைந்த இடைக்கால நிர்வாக சபையின், விவரம் இன்றோ அல்லது நாளையோ வெளியிடப்படலாம் என்று மிக நம்பிக்கையாகத் தெரிய வருகிறது.

நிர்வாக சபையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு 51 சதவீத பிரதிநிதித்துவமும், ஏனைய சகலருக்கும் 49 சதவீத பிரதிநிதித்துவமும் வழங்கப்படும் என உதயனுக்கு அறியவந்தது.

புலிகளின் ஐந்து அம்சக் கோரிக்கை குறித்தும், திலீபனின் உண்ணாவிரதம் குறித்தும் கலந்தாலோசிப்பதற்காக நேற்றுச் சென்னைக்கு அழைக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் மூலம் இந்த விவரம் வெளியிடப்படும் என்றும் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

புதிய ஏற்பாட்டின் பிரகாரம், இடைக்கால நிர்வாக சபையில் பிரதிநிதித்துவம் பின்வருமாறு அமையும் என நம்பப்பட்டது.

புலிகள் — 6 (ஒருவர் முஸ்லிம்)
ஈரோஸ் — 2 (ஒருவர் முஸ்லிம்)
கூட்டணி — 1
ஈ.பி.ஆர்.எல்.எவ். – 1
அரச சார்பில் — 1 (சிங்களவர்)

இவர்களை விட மூன்று இணைப்பு நிர்வாகிகள் நியமிக்கப்படுவர். ஒருவர் திரு. தேவநேசன் நேசையா; இரண்டாமவர் திரு. லயனல் பெர்னண்டோ; மூன்றுமவர் திரு. சி வீ. கே. சிவஞா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கம் யாழ் திரும்பினர்

யாழ்ப்பாணம், செப். 17

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பேச்சாளரான டாக்டர் அன்ரன் பாலசிங்கம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலை குறித்து அவர் விவரமாக அறிந்து இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது (இ–10)

## பத்திரிகை தணிக்கை நீக்கம்

கொழும்பு, செப். 17

பத்திரிகைத் தணிக்கை புதன்கிழமை [16-9-87] நள்ளிரவுடன் நீக்கப்படும் என்று நேற்று இலங்கை வானொலி அறி

[6ஆம் பக்கம் பார்க்க]

## கிழக்குக்கு மேலதிக இந்தியத் துருப்புகள் விரைவு!

கொழும்பு, செப் 17

கிழக்கு மாகாணத்துக்கு இந்திய இராணுவத்தினர் மேலதிகமாக அனுப்பப் பட்டுள்ளனர்.

இத்தகவலை இந்திய இராணுவத்தின் தென் பிராந்தியத் தளபதி லெப்டினட் ஜெனரல் திபெந்தர் சிங் நேற்றுத் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று நடந்த பாதுகாப்பு மாநாடு ஒன்றில் அவர் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கில் வன்செயல்களைக் கட்டுப்படுத்தவும் ஒப்பந்தத்தைச் சரிவர நிறைவேற்ற உதவு முகமாகவும் மேலதிகமாக இந்திய இராணுவத்தினர் கிழக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கில் 7 இடங்களில் மேலதிக இந்திய இராணுவத்தினர் நிறுத்திவைக்கப் பட்டுள்ளனர்.

மக்கள் கேட்டுக் கொண்டால் இன்னும் மேலதிகமாக இந்திய இராணுவ முகாம்கள் கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்படும்.

இப்படி லெப்டினன்ட் ஜெனரல் திபெந்தர்சிங் தெரிவித்தார்.

முச்சந்திமுரளி



செய்தியைப் பார்த்தா திலீபன் விரும்பின புரட்சி இப்பவேவெடிச்சு விடும்போலே இருக்கு....!



சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருக்கும் திரு. திலீபன், இரண்டாவது நாளான நேற்று சோர்ந்தநிலையில் படுத்திருப்பதை முதற் படத்தில் காண்கிறீர்கள்.

திலீபனின் உண்ணாவிரதப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அங்கு கூடியிருந்த மக்களில் ஒருபகுதியினரை படத்தின் கீழ்ப்பகுதியிலும் காணலாம். (படங்கள் -ஜெயம்) (ஒ)

## திலீபன் மயக்கம்!

யாழ்ப்பாணம், செப். 17

நேற்றிரவு திலீபன் மயக்க நிலையை அடைந்திருந்தார். டாக்டர்கள் அவருக்கு முதலுதவிச் சிகிச்சைகளைச் செய்து கொண்டிருந்தனர்.

திலீபன் மயங்கியதை அடுத்து அங்கிருந்த மக்கள் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கதறி அழுததைக் காணக்கூடியதாக இருந்தது.

நேற்றிரவு திலீபனைப் பரிசோதித்த டாக்டர்க

(6ஆம் பக்கம் பார்க்க )

## யாழ் பொலீஸ் நிலையம் முன்மக்கள் ஆர்ப்பாட்டம்

### உள்ளே புகுந்த கூட்டத்தினர் தஸ்தாவேஜுக்களையும் எரித்தனர்

யாழ்ப்பாணம், செப். 17

யாழ்-பொலீஸ் நிலையம் முன் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் செய்து பொலீஸ் தஸ்தாவேஜுக்களை தீயிட்டுக் கொளுத்தினர்.

கடந்தவாரம் புதிதாகத் திறக்கப்பட்ட பண்ணை பொலீஸ் விடுதி பொலீஸ் நிலையத்தின் முன் நூற்றுக்கணக்கான மக்கள் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பொலீஸ் நிர்வாகம் தேவையில்லை, பொலீஸ் நிலையத்தை மூடுங்கள் எனவும் மக்கள் கோஷமிட்டனர்.

உணர்ச்சி மேலீட்டினால் பொலீஸ் நிலையத்துக்குள் புகுந்த மக்கள் அங்கிருந்த சில பைல்களை தீயிட்டுக் கொளுத்தினர்.

புலிக்கொடி ஒன்றையும் அவர்கள் அங்கு பறக்க விட்டனர்.

(இ–10)

## வல்வை பொலீஸ் நிலையம் முன்பாகவும் மறியல்

### பொலீஸார் வெளியேறினர்

வடமராட்சி, செப். 17

வல்வை பொலீஸ் நிலையம் முன்பாக நேற்று மக்கள் மறியல்போராட்டம் செய்தனர். இதனை அடுத்து அங்கிருந்த பொலீசார் அனைவரும் வெளியேறினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வடமராட்சி எங்கும் மறியல் போராட்டம் நடைபெற்றது.

வல்வையில் தபாற்கந்தோர் முன்பாகவும், பொலீஸ் நிலையம் முன்பாகவும் ஆயிரக்கணக்கானோர் மறியல் செய்தனர்.

பாடசாலைகள், கடைகள், ஏனைய தனியார் நிறுவனங்கள் யாவும் மூடிக்கிடந்தன. (ஒ–160)

## சம்மாந்துறை உதவி அரச அதிபர் சுட்டுக் கொலை!

சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. விக்னராஜா செவ்வாய்க்கிழமை இரவு இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

54 வயதான திரு. விக்னராஜா யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்.

★ போராளிக் குழுக்களிடையேயான மோதலை நிறுத்த மத்தியஸ்தம் செய்யப்போன

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் பெரிய அளவிலான இந்திய முகாம்

கிளிநொச்சி, செப். 17

கிளிநொச்சிபுகையிரத நிலயத்திற்கு அருகாமையில் இந்திய ராணுவம் பெரிய அளவிலான முகாம் ஒன்றை அமைத்துள்ளது.

வடபராட்சி புலோலியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரே இந்த முகாமிற்கு இடம் பெயர்ந்துள்ளதாகத்

[6 ஆம்பக்கம் பார்க்க]

## போராட்டத்துக்கு ஆதரவு தாருங்கள்

யாழ்ப்பாணம், செப். 17

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சைப் போராட்டங்களை நடத்திவரும் எமக்கு பூரண ஆதரவுதாருங்கள்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அறிக்கையின் விவரம் வருமாறு:-

இப் போராட்டத்தை மேலும் வலுவூட்டும் வகையில் அத்தியாவசிய தேவைகளாகிய வைத்தியசாலைகள், கூட்டுறவு பண்டகசாலைகள், உணவுச் சாலைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து நிறுவனங்களையும் பூரண ஆதரவு தருமாறு கேட்

[6 ஆம் பக்கம் பார்க்க]

**சுபநேரம்**
17-09-1987
வியாழக்கிழமை
சுபநேரம்:
7.33முதல் 9.03வரை
ராகுகாலம்:-
1,33முதல் 3.03வரை

## மரணத்தின் பின்பாவது மக்கள் புரட்சி வெடிக்கட்டும்

### திலீபன் கண்ணீர் உரை

யாழ்ப்பாணம், செப். 17

எனது மரணத்தின் பின்னராவது மக்கள் புரட்சி வெடிக்கட்டும். அதன் மூலம் சுதந்திரமான தமிழீழம் ஒன்றை அவர்கள் அமைத்துக் கொள்ளட்டும்.

35 மணித்தியாலங்களுக்கு மேலாக நீராகாரம் எதுவும் இன்றிசாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் திரு. திலீபன் நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மத்தியில் உடல் களைத்து இருந்த திலீபன் கண்ணீர் மல்க உரை நிகழ்த்தினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது

தலைவரின் அனுமதியுடனேயே நான் இப் போராட்டத்துக்கு வந்துள்ளேன் தலைவர் கூறி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கோடீஸ், திலகர் சென்னை விரைவு

யாழ்ப்பாணம், செப். 17

திலீபனின் உண்ணாவிரதத்தை அடுத்து விடுதலைப் புலிகளின் இரண்டு பிரதிநிதிகள் அவசரமாக இந்தியாவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 9-30 மணியளவில் சட்டத்தரணி செ. கோடீஸ்வரனும், திரு. திலகரும் விசேஷ விமானம் மூலம் சென்னைக்குப் பயணமானார்கள்.

தமிழக உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் இவர்கள் இருவரையும் சந்தித்து விடுதலைப் புலிகளின் நிலை குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிய வருகிறது. [இ–10]

## பிரபாகரன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப். 17

''சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் திலீபனுக்கு ஆதரவாக அவருடன் ஒரு நாள் உண்ணாவிரதமோ அல்லது உங்கள் பிரதேசங்களில் ஒரு நாள் உண்ணாவிரதமோ மேற்கொள்ளுங்கள்.''

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திரு. பிரபாகரன் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஒப்பந்தம் என்ற பெயரில் இன்று ஸ்ரீலங்கா அரசு படிப்படியாக எமது மக்களை ஏமாற்றி வருகிறது.

இச் செயலை எதிர்த்து எமது அரசியல் பிரிவுப் பொறுப்பாளராகிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிப் பேச்சு இன்று கொழும்பில்

கொழும்பு, செப். 17

வடக்கு — கிழக்கு மாநில சபைக்கு வழங்கப்படவிருக்கும் அதிகாரங்கள் பற்றிய இறுதிப் பேச்சுக்கள் இன்று வியாழன் கொழும்பில் ஆரம்பமாகின்றன.

★ ஊர்வலம் சென்றோர் மீது டிரக் மோதியது:

# இந்திய இராணுவ வீரர்களை பொதுமக்கள் கட்டிவைத்தனர்

### நெல்லியடி - கொடிகாமம் வீதியில் நேற்றுச் சம்பவம்

— உதயன் கரவெட்டிச் செய்தியாளர் —

கரவெட்டி, செப். 17

நெல்லியடி -கொடிகாமம் வீதியில் மறியல் போராட்டத்தில் ஈடுபடச் சென்றுகொண்டிருந்தவர்கள் மீது இந்திய இராணுவத்தினரின் 'டிரக்' மோதி இருபெண்கள் காயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து இருவர் காயமடைந்த மக்கள் கல்வீசியதில் இந்திய இராணுவத்தினர் னர். இந்திய இராணுவத்தினர் சிலர் மக்களால் பிடிக்கப்பட்டு சட்டி வைக்கப்பட்டனர்.

விஷயம் அறிந்து அந்த இடத்துக்கு வந்தஇந்திய உயர் அதிகாரிகள் விசா

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையில் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*** ***** சின்னஞ் சிறு விளம்பரம் *** ****

**தேவை**

மேலதிக ஆட்கள் தேவை. Cooks 4 வெற்றிடம், Cashier 4 வெற்றிடம், Waiters 4 வெற்றிடம், இருபாலாரும் வயது 20—40 நேரில் வரவும். Green Peking Palace, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

**வகுப்புகள்**

குறுகிய காலத்தில் சலுகைக் கட்டணத்தில் கம்பியூட்டர் கல்வி Computer Programming (Basic) பயிற்சிக் காலம் 2 மாதம் கட்டணம் 750 ரூபா மட்டும். ஆரம்பம் 19-9-87 சனி, ஞாயிறு 1 30 p. m. O/L படித்த இருபாலாரும் சேரலாம். சான்றிதழ் (Diploma) வழங்கப்படும். Unikco Computer Centre சுதுமலைச்சந்தி, மானிப்பாய், கே. கே. எஸ். ரோட் 3ம் கட்டை, கொக்குவில்.

இராணுவ நடவடிக்கையால் அழிந்து போன

# வெற்றிலை செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

காங்கேசன்துறை, செப். 17

வலி வடக்குப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அழிந்து போன வெற்றிலைச் செய்கைக்கு மீண்டும் புத்துயிர் அளிக்க புனர்வாழ்வு நிறுவனம் உதவி வழங்க இருக்கிறது.

மாவிட்டபுரம், கொல்லன்கலட்டி, தெல்லிப்பளை தென்மேற்குப் பகுதிகளில் பல்லாயிரம் ரூபா பெறுமதியான வெற்றிலைச் செய்கைகள் இராணுவ நடவடிக்கைகயால் நாசமாகியிருந்தன.

இப்பயிரை மீளமைக்க உதவுமாறு விவசாயிகள் வலி-வடக்கு பிரசைகள் குழு இணைப்புக் குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவ் அமைப்பு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் கவனத்துக்கு இதனைக் கொண்டு வந்தது.

இதைத் தொடர்ந்தே இப்பகுதியைச் சேர்ந்த 150 விவசாயிகளுக்கு தலா 2000 ரூபா விதம் உதவி வழங்க புனர்வாழ்வுக் கழகம் முன் வந்துள்ளது. (இ-68)

## எஸ். கேயின் 50வருட பணி மகத்தானது

### நீதிவான் அஞ்சலி உரை

கொடிகாம, செப்17

இந்த நீதிமன்றத்தில் கடந்த 50 வருடங்களாக சட்டத்தரணியாகப் பணிபுரிந்து மதிப்பு, மரியாதை, கண்ணியம் ஆகிய நற்பண்புகளால் அனைவரையும் கவர்ந்த திரு. எஸ் கே. திரவிய நாயகத்தின் மறைவு இந்நீதிமன்றங்களுக்கும், சட்டத்தரணிகளுக்கும் சாவகச்சேரிப் பொதுமக்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி திரு எஸ். கே. திரவியநாயகத்தின் மறைவு குறித்து நிகழ்த்திய அஞ்சலுரையில் மாவட்ட நீதிபதி திரு. பொ. பாலவடிவேல் மேற்கண்டவாறு கூறினார்.

நீதிபதி திரு பாலவடிவேல் மேலும் கூறியதாவது:

திரு. திரவியநாயகம் ஆரம்பத்தில் ஓர் ஆங்கில ஆசிரியராகிப் பின்னர் சட்டம் பயின்று உயர் நீதிமன்றச் சட்டத்தரணியானார்.

இவரின் பாராட்டுக்குரிய சேவையால் சமாதான நீதிபதி உத்தியோகப் பற்றற்ற நீதிவானாகவும் கௌரவிக்கப்பட்டார்.

தொழிலில் அடைந்த வளர்ச்சியால் முடிக்குரிய வழக்கறிஞராகவும் கௌரவம் பெற்றார்.

மக்கள் மத்தியில் மதிப்பும் பாராட்டும் பெற்றார். சட்டத்துறையில் இவர் டணியாற்றிய ஐம்பது வருட காலமும் ஒரு சரித்திர சகாப்தம் ஆகும்.

இவரின் மறைவு சகோதர சட்டத்தரணிகளுக்கு பெரும் கஷ்டம்.

இப்படி அவர் கூறினார்: (இ-75)

## மன்னாரில் 35 ஆயிரம் விவசாயிகளுக்கு நிவாரணம்

மன்னார், செப். 17

மன்னார் பகுதியில் வரட்சி நிவாரணப் பணிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் 35 ஆயிரம் மன்னார் விவசாயிகள் நன்மை பெறுகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் நிலவி வரும் வரட்சியைத் தொடர்ந்து சமூக சேவை அமைச்சு இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய வரட்சியால் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு வரட்சி நிவாரண வேலைகள் வழங்கப்படுவதுடன் மாதம் ஒவ்வொருவருக்கும் பத்தரைக் கிலோ மாவும் வழங்கப்பட இருக்கின்றது.

இதன்படி அடம்பன் உதவி அரசாங்க பிரிவில் 15 ஆயிரம் விவசாயிகளும், சிலாபத்துறை உதவி அரசாங்க பிரிவில் 10 ஆயிரம் பேரும், நானாட்டான் உதவி அரசாங்க பிரிவில் 6 ஆயிரம் பேரும், மன்னார் உதவி அரசாங்க பிரிவில் 4 ஆயிரம் பேரும் நன்மை பெறுகின்றனர்.

### உண்ணாவிரதம்

மட்டக்களப்பு, செப்.17

சிறைச்சாலையில் இருந்தும் தடுப்பு முகாம்களில் இருந்தும் விடுதலையான கைதிகள் ஏனைய கைதிகளின் விடுதலைக்காக மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி ஆகிய இடங்களில் உண்ணாவிரதமிருக்கத் தீர்மானித்துள்ளனர்.

18ஆம் திகதி களுவாஞ்சிக்குடியிலும், 19ந் திகதி மட்டக்களப்பிலும் இந்த உண்ணாவிரதம் நடைபெறும். (இ21)

### இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 17

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணி அளவில் ஜனாப். எஸ். எம் எ. சலீம் தலைமையில், இல 123/3, யாழ் முஸ்லிம் கல்லூரி வீதிக்கு அண்மையில் யாழ். மாவட்ட மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சிக் கடை வியாபாரிகளின் பொதுக் கூட்டம் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு கேள்வித்தொகை மூலம் பணம் செலுத்தி லைசென்ஸ் அதிகாரம் பெற்ற கடை வியாபாரிகள் மட்டும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ் மாவட் இறைச்சிக் கடைச் சங்கச் செயலாளர்கள் ஜனாப். எஸ் எம். சுல்தான், திரு க. சி. கிருஷ்ணன் ஆகியோர் கேட்டுள்ளார்கள். (இ)

### பங்குத் தந்தை சேவை நலன் பாராட்டு விழா

குருநகர், செப் 17

ஆனைக்கோட்டை உயரப்புலம் அடைக்கல நாயகி ஆலயத்தின் பங்குத் தந்தையாக கடந்த ஏழு வருடங்கள் சேவையாற்றி குருநகர் பங்குச்கு இடமாற்றம் பெற்றுள்ள வண பிதா, பி எம். இம்மானுவல் அடிகளாரின் சேவை நலனைப்பாராட்டி ஆனைக்கோட்டைப்பங்கு மக்களால் நன்றி தவிலல் வைபவம் ஆலய முன்றலில் நடத்தப்பட்டது.

வைபவத்திற்கு திரு த. அந்தோனிப்பிள்ளை தலைமை வகித்தார்.

சேவைநலன் பாராட்டி ஆனைக்கோட்டை ரோ. க. த. க. பாடசாலை அதிபர் திருமதி, பாக்கியம் சந்தசாமி, திரு. எஸ். வரதராசா ஆகியோர் பேசினர்.

திரு. ஜேபொன் கலன் வாழ்த்துப்பா வாசித்து வழங்கினார். (இ 51)

LANKA CEMENT LIMITED
KANKESANTHURAI

பொதிநிரப்பு நிலையத்தில் (PACKING PLANT) இருந்து சிமெந்துப் பொதிகளை கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள எமது உப களஞ்சியங்களுக்கு லொறிவண்டிகளில் ஏற்றிச் செல்லுதல்.

எமது பொதிநிரப்பு நிலையத்தில் இருந்து கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது உப களஞ்சியங்களுக்கு சிமெந்துப் பொதிகளை லொறி வண்டிகளில் ஏற்றிச் செல்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

மேற்படி கேள்விப்பத்திரங்கள் விநியோக உத்தியோகத்தர் காரியாலயத்தில் மீளப் பெற முடியாத வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்தி கிழமை நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 3 30 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி முதல் நண்பகல் 12 00 மணிவரையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி கேள்விப்பத்திரங்கள் 26-09-87 அன்று நண்பகல் 12 00 மணிக்குப் பின் விநியோகிக்கப்பட மாட்டாது.

கேள்விப்பத்திரங்கள் 28-09-87 அன்று காலை 10.00 மணிக்கு முன் உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டகத்தில் சேர்க்கப்படவேண்டும். கேள்விப்பத்திரங்கள் 28-9-87 அன்று காலை 10 30 மணிக்குக் குலுக்கப்படும்.

பிரதி பொது முகாமையாளர்
லங்கா சிமெந்து லிமிட்டெட்
16-09-87 காங்கேசன்துறை.

## இந்தியத் தளபதிக்கு ஆட்சேப மகஜர்

வடமராட்சி, செப் 17

வல்வை, திக்கம், பொலிகண்டி, இன்பருட்டி பகுதி மக்கள் இந்திய இராணுவம் திக்கத்தில் முகாம் அமைத்து இருப்பதை ஆட்சேபித்து மகஜர் ஒன்றை லெப். கேர்ணல் சத்திரேந்திர சிங்கிடம் கையளித்தனர்

இந்திய அமைதி காக்கும் படைத் தளபதிக்கு முகவரியிடப்பட்ட அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நீங்கள் தற்சமயம் முகாம் அமைக்கும் காணியின் அருகிலேயே நாம் காலம் காலமாக விவசாயம் செய்துவந்தோம். நாம் ஏழைகள், எங்கள் வாழ்க்கையை நடத்த நாம விவசாயம் செய்தே வாழவேண்டிய நிலையில் உள்ளோம். ஆகையால் நீங்கள் இதில் முகாம் அமைத்து எமது வாழ்க்கையைக் கெடுத்துவிடாதீர்கள். நாம் தொடர்ந்து வாழ எமது நிலத்தை விட்டு வெளியேறுங்கள்.

இலங்கை இராணுவம் முகாம் இடாத இடத்தில் நீங்கள் புதிதாக வந்து பின்னர் சிலவேளைகளில் நீங்கள் வெளியேறிய பின்னர், இலங்கை இராணுவம் வந்து முகாம் அமைக்க வாய்ப்பாக இருக்கும். ஆகையால் தயவுசெய்து இந்த இடத்தில் முகாம் அமைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

எமது உறவினர்கள் பக்கத்து வீடுகளில் இருப்பதால் நீங்கள் இருப்பின் அவர்கள் வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுவர். ஆகையால் தமிழ் மக்கள் துயர் துடைக்க வந்திருக்கும் நீங்கள் ஒருசில தமிழ் மக்கள் துன்பமடைவதை விரும்பமாட்டீர்கள் என நாம் நம்புகிறோம்.

நீங்கள் வடமராட்சியில் இலங்கை இராணுவத்துடன் அவர்கள் முகாம்களிலேயே இருந்தால், அவர்கள் யுத்த நிறுத்தத்தை மீறமலும் இருப்பர். எங்களுக்கும் அவர்கள் மீதுள்ள பயம் நீங்கி நிம்மதியாகவும் இருக்கும். (ஒ-160)

### இந்தியமுகாம் மூடப்பட்டது

காங்கேசன்துறைசெப்17

காங்கேசன்துறை கல்லூரி வீதியில் அமைந்திருந்த இந்திய அமைதிப் படை முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மூடப்பட்டது.

சமீபத்தில் இடம் பெற்றமறியல் போராட்டத்தின் போது இம்முகாமை மூடும்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

கடந்த ஞாயிறு மூடப்பட்ட இம்முகாமில் இருந்த இராணுவத்தினர் அகற்றப்பட்டனர். தளபாடங்களும் அகற்றப்பட்டு தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்கு அருகில் வறுத்தலை விளானில் புதிய முகாம் அமைக்கப்பட்டுள்ளது. (இ-68)

### முல்லைத்தீவில் இளைஞர் கொலை!

முல்லைத்தீவு, செப். 17

புதுக்குடியிருப்பில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தயா என்று அழைக்கப்படும் இந்த இளைஞர் இங்கூட்கிழமை மாலை [illegible] துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். [இ-10-நீ]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செய்திக்கொத்து

### சின்னக்கடையில்

குருநகர், செப். 17

யாழ். சின்னக்கடை, நவீனசந்தை மேல் மாடியில் உள்ள மலசல கூடங்களுக்கு தண்ணீர் வசதி செய்யப்படாததால் பாவனையாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். (இ-51)

### சிமெந்து ஆலை மீண்டும் இயங்கும்

திருகோணமலை, செப் 17

சீனன்வாடியில் உள்ள டோக்கியோ சிமெந்துத் தொழிற்சாலை நவம்பர் மாதத்திலிருந்து மீண்டும் செயல்படவுள்ளது.

தனியாருக்குச் சொந்தமான இத்தொழிற்சாலை 1985இல் குண்டுவைக்கப்பட்டுத் தகர்க்கப்பட்டது தெரிந்ததே.

(இ-எ-150)

### 'வீமன்காமம் சிவராஜா மகாவித்தியாலயம்'

காங்கேசன்துறை, செப். 17

இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திரு. மு. சிவராசாவின் அஞ்சலிக் கூட்டம் வித்தியாலயத்தில் நடைபெற்ற சமயம் ''வீமன்காமம் சிவராஜா மகாவித்தியாலயம்', என்று பெயரிடவேண்டும் என்றும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

வித்தியாலயஅபிவிருத்திச்சபைக்கூட்டம் தற்காலிக அதிபர் திரு. ஆர். கணேசன் தலைமையில் நடைபெற்ற சமயம், பலரும் அதிபரின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டிப் பேசினார்கள். (இ-68)

### இடமாற்றம்

மானிப்பாய், செப். 17

செவ்வாய் முதல் ஊர்காவற்றுறைத் தொகுதியில் இருந்து தத்தமது சொந்தத் தொகுதிகளுக்கு 63 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றிருக்கிறார்கள்.

அதே தினத்தில் இருந்து ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு 61 ஆசிரியர்கள் பிற தேர்தல் தொகுதிகளில் இருந்து இடமாற்றம் பெற்றனர்.

நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு ஆகிய கஷ்டப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளவர்கள் அங்கு 2 வருடம் சேவை ஆற்றிய பின்னர் தமது பழைய இடங்களுக்கு இடம் மாற்றப்படுவர். (இ-90)

## முஸ்லிம் எழுத்தாளர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவர்

### 20ஆம்திகதி அக்கரைப்பற்றில் வைபவம்

அம்பாறை, செப் 17

முஸ்லிம் எழுத்தாளர் தேசிய கவுன்சிலினால் நடத்தப்பட்ட முஸ்லிம் எழுத்தாளர்களில் சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு வைபவத்தில் பரிசுபெற்ற கிழக்கிலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இலங்கை இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம், இந்தப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும் வைபவத்தைஎதிர்வரும்20 ஆம் திகதி நடத்தவிருக்கின்றது

பணியகத் தலைவரும், கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகப் பதிவாளருமான ஜனாப்.எஸ்.எச். எம். ஜெமீல் தலைமையில் அக்கரைப்பற்று பொது நூலக கேட்போர் கூடத்தில் வைபவம் நடைபெறும்.

பரிசுபெற்ற எழுத்தாளர்களான கவிச்சுடர் அன்பு முகைதீன், ஜனாப் அ ஸ. அப்துஸ்ஸமது, ஜுனைதா ஷெரீப், மருதூர்க் கொத்தன் ஜனாப் வி. எம். இஸ்மாயில், மௌலவி எம். எம். முபாறக், மர்ஹூம் ஈழமேகம் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஒ-14)

அதிர்ஷ்டசாலி நீங்களா ?

1987 உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகளை முன்னிட்டு

'ஷப்ரு' நிதி நிறுவன ஆதரவில்

உதயன் நடத்தும் கிரிக்கெட் புதிர்

உலக கிண்ண போட்டிகளைப் பற்றி உங்களுக்குள்ள பரிச்சயத்தைப் பரீட்சிக்கும் இப் புதிர்ப் போட்டிக்கு நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவு தான்.

1. உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளில் வெளியாகும் கூப்பன்களை வெட்டியெடுத்து அதில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கான விடைகளை ஊகித்துக் கொள்ளுங்கள்.
2. நீங்கள் ஊகித்துச் சரியெனக் கருதும் விடைகளை கூப்பன்களில் எழுதுங்கள்.
3. நிரப்பிய கூப்பன்களை உதயன் - ஷப்ரு நிறுவனங்களில் இதற்கென வைக்கப்படும் பெட்டிகளிலோ அல்லது தபால் மூலம் ''கிரிக்கெட் புதிர்ப் போட்டி'' நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
4. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். சரியான விடையை ஊகித்து அறியும் அதிர்ஷ்டசாலிக்கே பரிசு வழங்கப்படும்.
5. கூப்பன்களில் நிரப்பப்படாத விடைகள் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
6. உதயன் - ஷப்ரு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

கிரிக்கெட் புதிர்ப் போட்டியில் வென்று அதிர்ஷ்டசாலியாகி வெகுமதியான பரிசில்களை வெல்லுங்கள்.

ஷப்ரு ஆதரவில்
உதயன் நடத்தும்
உலக கிண்ண கிரிக்கெட் புதிர்

Reliance CUP 1987

பெயர்: ____________
முகவரி: ____________

இம் முறை உலக கிண்ணத்தை வெல்லப் போகும் நாடு எது? . . . . . .

இம் முறை இரண்டாவது இடம் எந்த நாட்டுக்கு கிடைக்கும்? . . . . . .

போட்டித் தொடரில் தனிப் போட்டியில் ஆகக் கூடிய ஓட்டங்களை எந்த நாடு எடுக்கும்? . . . . . .

போட்டித் தொடரில் தனிப் போட்டியில் ஆகக் குறைந்த ஓட்டங்களைப் பெறப் போகும் நாடு எது? . . . . . .

இந்தப் போட்டியில் இந்திய வீரர் சிறீகாந்த் சதம் பெறுவாரா? . . . . . .

# தூக்குக் கயிற்றிலும் தொங்கத் தயாராக இருந்த வன்னியர்!

கோப்பாய்கோமான் வன்னியசிங்கத்தின் நினைவு தினம் இன்றாகும். அவரது கருத்துக்கள் சிலவற்றை இங்கு படியுங்கள்.

"............மற்றொரு மொழிக்குக் கேடுபயக்காது, சிங்கள மொழியுடன் தமிழ் மொழிக்குச் சம உரிமை வேண்டுமெனப் போராடுவது தேசத் துரோகமானால்-

எமது மரபுவழித் தாயகத்தின் அரசியல், பொருளாதாரம், பண்பாடு முதலியன சிங்களப் படையெடுப்பால் அழிந்தொழியாது இருக்கப் போராடுவது தேசத் துரோகமென்றால்-

இந்த நாட்டையே தாயகமாகக் கொண்டு அதன் வருவாயின் அறுபது சதவீதத்தை நல்கும் தமிழ்த் தொழிலாளர்களது குடியுரிமை, வாக்குரிமைக்குப் போராடுவது தேசத்துரோகமென்றால்-

இதே, தமிழ்த் தொழிலாளர்களது அடிமை நிலையைப் போக்கப் போராடுவது தேசத் துரோகமென்றால்-

இன்று இலங்கையில் உள்ள அரசியல் அமைப்பை மாற்றி, கூட்டாட்சி அடிப்படையில் அதிகாரத்தைப்பிரித்து, அதே நேரத்தில் நாட்டைப் பிரிக்காது, ஒருஅரசியல்அமைப்புக்கு வழிகோல நாம் அறப்போர் தொடுப்பதுதேசத் துரோகமென்றால்-

இத்தனை தேசத்துரோகங்களையும் மொத்தமாக நிறைவேற்றி, அதன் பலாபலன்களை மகிழ்ச்சியோடு அனுபவிப்பேனே ஒழிய, எனது இனம், ஒவ்வொருதிருப்பத்திலும் இழித்துப் பழிக்கப்பட்டு, சிதைந்துசீரழிந்து காலப்போக்கில் அழிந்துபோவதைச் சகிக்கமாட்டேன்! இனத்தின் உரிமைக்காகப் போர் தொடுப்பதால் தேசத் துரோகியெனக் குற்றம் சாட்டப்பட்டுத் தூக்குக் கயிற்றில் தொங்க விடப்படுவதையே நான் வரவேற்கிறேன்"

### சமஷ்டியா? சுதந்திர ஈழமா?

சமஷ்டி அரசமைப்பா அல்லது சுதந்திர ஈழமா

## அவரது சிந்தனைச் சிதறல்கள் சில

என்பதே இன்று தமிழ் மக்கள் முன்னிலையிலுள்ள பிரச்சினை! நாங்கள் சமஷ்டி அரசியலையே விரும்புகின்றோம்! ஆனால் திட்டமிட்டு தமிழர்களை அழிக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுமானால் சுதந்திர ஈழம் கேட்கும் நிலை வருமென எச்சரிக்கிறேன்!

### நேசநாடுகளின் உதவியை நாடுவோம்!

இலங்கையில் இனி ஐக்கியம் இருக்க முடியாது! நாங்கள் வேறு நாடுகளுடன் சேர விரும்பவில்லை; ஆனால் தமிழர்களை நசுக்கி ஒழிக்கும் படலம் தொடருமானால் மற்ற நாடுகளின் உதவியை நாட வேண்டி வரும். உலக மக்களின் ஆதரவுக்கு நாம்வேண்டுகோள்விடுப்போம்!

### மாணவரும் அரசியலும்

நமது (1957) ஆகஸ்டு சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கான தொண்டர் படையில் மாணவர்களும் ஆயிரக்கணக்கில் சேர வேண்டும். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் - மஹாத்மாகாந்தியடிகள் கூட மாணவர்களைப் பயன்படுத்தியுள்ளார்! மாணவர்களும் சேர்ந்து போராடித் தம் மொழி உரிமையையும் கலாசாரத்தையும் நாட்டினையும் காப்பாற்றும்படி வேண்டுகிறேன்.

### தேசியவாதம் வகுப்புவாதமல்ல!

தமிழ் இந்த நாட்டில் ஆட்சி மொழியாவது ஆட்சியாளர் கையில் இல்லை! தமிழர் கையில் தான் தங்கியுள்ளது.

நாம் நமது உரிமைகளுக்காக உணர்ச்சிக்குரல் எழுப்புவதை வகுப்புவாதம் என்கிறார்கள். அப்படிக்கூறப்படுவதால் நாம் நமது போராட்டத்தை நிறுத்திவிடத் தயாராய் இல்லை! உரிமைகளுக்காகப்போராடுவது வகுப்பு வாதம் என்றால் அந்த வகுப்புவாதத்தினை நாம் முழுமனதோடு வரவேற்கிறோம்! ஆதரிக்கிறோம்!!

### எல்லாம் தமிழ் இயக்கம் ஏன்?

"......... இவற்றிலெல்லாம் நாம் முதலிற் கைக்கொள்ள வேண்டியது வாழ்க்கையின் எந்தத் துறையிலும் தமிழ் மொழியைக் கையாள வேண்டுமென்பதேயாகும். இன்றைய நிலையில் எல்லாமே தமிழ்மொழி மூலம் நடத்தப்பட வேண்டுமென்பதை மேலும் வற்புறுத்தவிரும்புகிறேன். தமிழன்னையின் உரிமையைக் காப்போம், பெருமையைப் பேணுவோம் என்றெல்லாம் ஒருபுறம் பேசிக்கொண்டுஇன்னொருபுறம் தமிழல்லாத இன்னொரு மொழியைக் கைக்கொள்வே மேயானால் அதைவிடச் சிரிப்புக்கிடமான செயல் பிறிதொன்றில்லை!

நாமே நமது தமிழ் மொழியைப் புறக்கணித்தவர்களாவோம். ஆகவே தான் எல்லாம் தமிழியக்கத்தை ஆதரித்து அதனைக் கைக்கொள்ளும்படி வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றேன். மொழியுரிமைப் போராட்டத்தில் எல்லாம் தமிழ் இயக்கம்மிக முக்கிய அங்கம் வகிக்கிறது! நம் தாய்மொழியை ஆட்சியாளர் அலட்சியம் செய்யாமல் விடுவதற்கான நிர்ப்பந்தத்தை அந்த இயக்கம் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது!

எனவே இத்தகைய மாநாடுகள் மேற்கண்ட எண்ணங்களை மக்கள் மனதில் தூண்டிவிடுவதற்கு வாய்ப்பான முறையில் அமையவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பாரதிஅரங்கம், இடைக்காடு - திருக்குறள் மாநாடு 12-09-59)

### அடக்கு முறை

ஒரு சிலரை அடித்து வீழ்த்துவதாலும், அடக்குமுறையைச் சட்ட விழ்த்துவிடுவதாலும், இராணுவத்தை முரட்டுத்தனமாக உபயோகிப்பதாலும் தமிழரின் விடுதலை இயக்கத்தினை நசுக்கிவிடலாம் என்று நினைத்தால் அது இந்த அரசாங்கம் செய்யும் முட்டாள்தனமான முடிவாகவே இருக்கப்போகிறது.

### சிங்கள ஸ்ரீ எதிர்ப்புவழக்கில்

கனம் நீதிபதிஅவர்களே! இவ்வழக்கில் நான்குற்றவாளியா இல்லையா என்று கேட்கப்பட்டது! நேரடியாக "ஆம்" அல்லது "இல்லை" என்றுபதிலளிக்க என்னால் சாத்தியமில்லை. தென் இலங்கையில்வாழும்தமிழர்கள்மீது காடைத்தனங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. "தமிழர்வேட்டை" சர்வ சாதாரணமாகிவிட்டது! பொலிஸார் நீதியை நிலைநாட்டுவதை விடுத்துக் காடைத்தனம் புரிவோருக்குப் பகிரங்கமாக உதவி செய்கிறார்கள்.

ஆனால் தமிழர்கள்சாத்வீகமாகச்சிங்கள ஸ்ரீக்கு எதிர்ப்புக்காட்டி, தமிழ் ஸ்ரீ எழுதினால் உடனே கைது செய்யப்படுகிறார்கள். இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கு சமாதானமோ பாதுகாப்போ இல்லாத ஒரு உண்மையான நரகமாய் இருக்கிறது!

எனவேதான்இலங்கையிலுள்ள தமிழர் சிறைச்சாலையைக்குறித்து அச்சமற்றவர்களாய் இருக்கின்றனர். சிறைக்குப் போக எந்தத் தமிழரும் தயங்குவதில்லை. காந்திய முறையில் தமிழர் சுதந்திரப் போராட்டத்தை வழிநடத்துபவருள் ஒருவன் என்ற முறையில் தனது சமூகத்துக்குச் செய்ய வேண்டிய தெளிவான, தவிர்க்கமுடியாத கடனமயாகும் இது! ஆதலால் விசாரணைக்குப்பின் நான் குற்றவாளியெனக் கண்டால் எவ்வித தயக்கமுமின்றி, சட்டம் அனுமதிக்கும் ஆகக்கூடிய சிறைத் தண்டனையை விதிக்குமாறு உங்களை நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். தயவு செய்து விளைவுகளைப் பொருட்படுத்தாது உங்கள் கடமையைச் செய்யுங்கள்.

### தந்தை குறித்து..

தந்தை "செல்வா" காட்டும் வழியைப் பின்பற்றினால் மட்டுமே தமிழினத்தின் விடுதலையைப் பெறலாம் என்பதுஎனது திடமான நம்பிக்கை 10 அல்லது 12 வருடங்களுக்கு முன் அவர் எச்சரித்த மொழிப்பிரச்சினை சிங்களக் குடியேற்றப் பிரச்சினை போன்ற விஷயங்கள் சிலவற்றைக் கடந்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழ்பேசும் மக்கள் நன்றாக உணரத் தலைப்பட்டனர்.

அநேக தமிழ்த்தலைவர்கள் ஒத்துழைப்பு பல்லவி பாடி ஒற்றை ஆட்சியில் தமக்குஅசைக்கமுடியாத நம்பிக்கை யுண்டெனக் கூறிவந்த காலத்தில் தமிழினத்துக்கு ஒற்றை ஆட்சியில் அடிமைத்தனந்தான் கிட்டும் என்று இடைவிடாது எச்சரித்தார் செல்வா. அன்று தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து அவர் பேச்சைக் கேட்டு நடந்திருந்தால்

(5 ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: இன்பம்

★ திருமலையில்

# அரசதிணைக்களங்களுக்கு ஏற்பட்ட அழிவுகள்

திருகோணமலை மாவட்டத்தில் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களுக்கு கடந்த கால வன்செயல்களினால் ஏற்பட்டபாதிப்புகள் குறித்து ஆராயப்பட்டது.

திருமலைக் கச்சேரியில் உலக வங்கிக் குழுவினர், புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு. ஒஸ்டின் பெர்னாண்டோ, திருமலை அரசாங்க அதிபர் திரு. டி. எம். ஆரியரத்ன, மற்றும் அரச உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்ட மாநாட்டிலேயே இது குறித்து ஆராயப்பட்டது.

மாநாட்டில் திணைக்களங்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் பற்றி ஆராயப்பட்டு உடன் நிதியும் வழங்கப்பட்டது. விவரம் வருமாறு:

### கல்வித்திணைக்களம்

கல்விப் பணிப்பாளர் திரு. டபிள்யு. விஜயசூரிய கல்வித் திணைக்களத்துக்கு ஏற்பட்ட அழிவுகள் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறினார்.

அவரின் அறிக்கையின்படி மொத்த அழிவு 88 லட்சம் ரூபா.

214 பாடசாலைகளில் 84 பாடசாலைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. அத்தோடு பாடசாலைத் தளபாடங்கள், உபகரணங்கள் யாவும் களவாடப்பட்டுள்ளன 25 சதவீதமான பாடசாலைகளில் கூரைகள் மாத்திரம் போடவேண்டும்.

உடனடியாக பாடசாலைகளை மீண்டும் இயங்கவைக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் ஆராயப்பட்டு அதற்காக 35 லட்சம் ரூபாவை புனர்வாழ்வு நிதியிலிருந்து திரு ஒஸ்டின் பெர்னாண்டோ வழங்கினார்.

இந்த நிதியைக் கொண்டு உடனடியாகச் செயலில் இறங்கும்படி கல்விப் பணிப்பாளரை திரு. பெர்னாண்டோ கேட்டுக் கொண்டார்.

### சுகாதாரத் திணைக்களம்

சுகாதாரத் திணைக்களத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் 45 லட்சம் ரூபாவாகுமென்று டாக்டர் ஈ.ஜி. ஞானகுணாளன் கூறினார்.

உடனடித் தேவைகள் ஆராயப்பட்டன. மொறவெவ, குச்சவெளி, தோப்பூர், ஈச்சிலம்பத்தை, தம்பலகாமம், சேருவில ஆகிய பகுதிகளில் மீண்டும் ஆஸ்பத்திரிகளை ஆரம்பிப்பதற்காக 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா திரு. ஒஸ்டின் பெர்னாண்டோவினால் வழங்கப்பட்டது.

### விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்திற்கு ஏற்பட்ட நஷ்ட விவரங்களை உதவிப்பணிப்பாளர் திரு. யோகலிங்கம் எடுத்துக் கூறினார். உடனடித்

(5 ஆம் பக்கம் பார்க்க)



பொய்யாமொழி

**குறள்:**

தளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு.

**பொருள்:**

மழைத்துளி இல்லாதிருத்தல் உலகத்திற்கு எத்தன்மையானதோ, அத்தன்மையானது நாட்டில் வாழும் குடிமக்களுக்கு அரசனுடைய அருள் இல்லாத ஆட்சி.

வாசகர் திருமுகம்

## றெட்பாணாவின் செயல்

முல்லைத்தீவில் அகதிகளாக இருந்த திருகோணமலையைச் சேர்ந்த எம்மை இருபஸ்களிலும் தோணிகளிலும் றெட்பானா ஸ்தாபனம் அனுப்பியது. இந்த ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் ஒருவர்கூட எம்முடன் வரவில்லை:

எம்மை அரசாங்க அதிபரிடமோ அன்றி பிரசைகள் குழுவிடமோ ஒப்படையாமல் நடுத்தெருவில் றெட்பானா விட்டுள்ளது:

அகதிகளாக வந்த நாம் மர நிழல்களில் தங்கி, சிரமப்பட்டுக் காலம் கடத்துகிறோம். அரசாங்கம் எம்மை அனுப்பும் பட்சத்தில் சகல வசதிகளும் அளிக்கும்: றெட்பானாவின் செயலால் எமது பல சலுகைகளை இழந்துவிட்டோம்.

என்றாலும் நாம் முல்லைத்தீவில் இருக்கும் போது றெட்பானா செய்த உதவிகளை மறக்கமாட்டோம், ஆனால் திட்டமில்லாத விதத்தில் காரியம் ஆற்றுவதைத் தொடர்ந்து செய்யவேண்டாம் என றெட்பானாவைக் கேட்கிறோம்.

எஸ். அரவிந்தன்
(திரியாய் மக்கள்சார்பாக)
திருகோணமலை

அளம்பில் எழில்மிகு கடலோரத்தில்
குடிகொண்டெழுந்தருளியிருக்கும்
அன்னை வேளாங்கண்ணியின்
திருத்தல 2வது விழா

20 புரட்டாதி 87 ஞாயிறு வாரம்
(புரட்டாதி மூன்றும் ஞாயிறு)
"அபாயம் வந்த போது காத்த அன்னையே
நின்பதம் போற்றினோம் காத்திடுவாய்"

17 புரட்டாதி—வியாழன் காலை 7-00 மணி:
அன்னையின் திருச்சுரூபப்பவனி
பவனியின் பாதை:- ஆலயத்திலின்றும் ஆரம்பித்து, கடற்கரையோரமாக துண்டாய் அடைந்து, அளம்பில் வீதி வழியாக குருசடி அடைந்து, கடற்கரையோரமாக மீண்டும் ஆலயம் வந்தடையும்.
மாலை 6-00 மணி: கொடியேற்றம், திருச்செபமாலை, நோவனை, திருப்பலி.
18 புரட்டாதி வெள்ளி: மாலை 6 00 மணி
திருச்செபமாலை, நோவனை, திருப்பலி.
19 புரட்டாதி சனி: மாலை 6-00 மணி
நற்கருணை விழா
20 புரட்டாதி ஞாயிறு: காலை 7-00 மணி
திருநாட் திருப்பலி, ஆலய முன்றலில் அன்னையின் திருச்சுரூபப்பவனி, அன்னதானம்
"அன்னை வேளாங்கண்ணி செபமாலைக் கடையில்" நேர்த்திப் பொருட்கள், மெழுகுதிரி, வழிபாட்டுப் புத்தகங்கள், வரவணிக்கம், செபமாலை, புனிதரின் படங்கள், சுருபங்கள் முதலியன பெற்றுக்கொள்ளலாம்.

வருக! அனைவரும் வருக!!
அன்னையின் ஆசி பெறுக!!!
— நன்றி —
அன்னைவேளாங்கண்ணி புரம்,
அளம்பில். (1518)

## ஈரான் - ஈராக்யுத்தத்தால் இஸ்ரவேலுக்கு இலாபம்

ஈரான் - ஈராக் யுத்தம் தொடர்பாக சோவியத் யூனியனின் கண்ணோட்டம் இது.

வளைகுடா யுத்தம் நாளுக்கு நாள் அதிகரிப்பதாக செய்திகள் கூறுகின்றன. 1980 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த யுத்தம் இரு நாடுகளினதும் மக்களைக் கொன்று குவித்துள்ளது.

கூடுதலான ஆயுதங்களை இந்த இரு நாடுகளுக்கும் விற்பதால் சில நாடுகள் பெரும் இலாபம் ஈட்டுகின்றன. இதில் குறிப்பாக அமெரிக்கா முதலிடத்தை வகித்து வருகின்றன.

ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவுடன் கூட்டாக இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. இதனால் யுத்த [illegible] விரும்புவதில்லை.

[illegible] 1980 ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்காவிலிருந்தும் இஸ்ரவேலில் இருந்தும் இரகசியமாக ஆயுதங்களைப் பெற்று வந்துள்ளது என்று அறிக்கைகள் கூறுகின்றன. இதில் ரொக்கெட்டுகளும் ஏவுகணைகளும் யுத்தக்கப்பல்களும் அடங்கும்.

1981 ஆம் ஆண்டில் ஆயுத விற்பனை மூல

உருளும் உலகில்

மாக இஸ்ரவேல் 13 கோடி 50 லட்சம் டாலரைச் சம்பாதித்தது என்று டெல் அவிவ் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

1982 ஆம் ஆண்டு 5000 [illegible] ஆயுதங்கள் ஏற்றுமதியா[illegible] - 100 கோடி டாலர் பெறுமதியுடையதாகும்.

டென்மார்க் கப்பல்களின் உதவியுடன் இது இடம் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

1986 ஆம் ஆண்டு 'ஈரான் கேட்' விவகாரம் வெளிச்சத்திற்கு வரும்வரை இது நடைபெற்றுள்ளது.

இஸ்ரவேலின் உதவியுடன் ஈரானியர்கள் அமைத்துள்ள ஓர் இயக்கம் ஐரோப்பாவின் பல பகுதிகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்து வந்துள்ளது. இந்த இயக்கத்துக்கானபலதொழில் நுட்ப வசதிகளை பிரிட்டன் வழங்கி வருகிறது.

மேலும்13 ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த கம்பனிகளும் ஆயுத விற்பனையில் பங்கு கொண்டுள்ளன. இதில் மேற்கு ஜேர்மனியின் கம்பனிகளும் முக்கிய பங்கை வகிக்கின்றன எனக் கூறப்படுகிறது. (இ)

பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★

★ சவூதி அரேபியாவில் வேலைவாய்ப்புகள் உண்டு.

★ முழு விவரங்களுக்கும் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

T. இந்திரநாதன்
★ M. THREE TRAVELS ★

"சற்குணவாச"
கல்லூரி வீதி, சோதிலேன்,
காங்கேசன்துறை
(பஸ்வழி இல. 769)

96,கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)

பிரிவு II
DAY CLASS
[திங்கள் — வெள்ளி 8-30 — 12-30]

நாளை ஆரம்பம்:- 18 . 09 . 87
காலை 8 - 30 மணி
(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)
8-30 — CHEMISTRY -சேதன ரசாயனம்
9-30 — PHYSICS -புலங்கள்
10-30 — BOTANY -தாழ்வகைத் தாவரங்கள்
11-30 — ZOOLOGY -இழையவியல்
10-30 — Applied Maths-காவிகள்
11-30 — Pure Maths -இருபடிச் சமன்பாடுகள்

குறிப்பு:-
பிரிவு I இற்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.

★ விவரங்கட்கு:-
New Master Institute
B. M. G. Lane, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசம்பாவிதங்களால்

# கிளிநொச்சி மாவட்ட உள்ளூர் சபைகளுக்கு ரூ. 830 லட்சம் நஷ்டம்

கிளிநொச்சி, செப். 17

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் உள்ளூராட்சிச் சபைகளுக்கு ஏற்பட்ட மொத்த சேதம் சுமார் 83 மில்லியன் 830லட்சம்)ரூபாவாகும் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இப்பணம் இடைத்ததும் கிளிநொச்சி, பரந்தன், பூநகரி ஆகிய இடத்துச் சந்தைகள் நவீனமயமாகும்

இதற்கான பணத்தை ஒதுக்கீடு செய்து தரு மாறு புனர்வாழ்வு அமைச்சிடம் கேட்டிருப்பதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. தேவசிகாமணி தெரிவித்தார்.

கடந்த 85 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் கிளிநொச்சியில் பாரிய அளவிலான அசம்பாவிதங்கள் ஆரம்பமாகின. இதில் முதல் கட்டமாக நடைபெற்ற அசம்பாவிதத்தில் கிளிநொச்சி பழைய சந்தைக் கட்டடங்களும், சந்தையினுள்ளும் அதன் அருகேயும் இருந்த சகல கடைகளும் தரைமட்டமாகின.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சியில் 1977 ஆம் ஆண்டு கட்டப்பட்ட புதிய சந்தை இயங்கத் தொடங்கியது. இவ் வேளையில் 86 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஏற்பட்ட இரண்டாம் கட்ட அசம்பாவிதத்தைத் தொடர்ந்து இச் சந்தையும் மூடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பரந்தன் சந்தை இயங்கி வந்தது. பின்னர் பரந்தனில் கடந்த பெப்ரவரி இரண்டாம் திகதி ஏற்பட்ட அசம்பாவிதத்தினால் இச் சந்தையும் செயலிழந்தது. கட்டடமும் உடைக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வு வேலைகள் ஆரம்பிக்கும் பட்சத்தில் கிளிநொச்சியில் தரைமட்டமான பழைய சந்தை இருந்த இடத்தில் நவீன சந்தையும் அதற்கு முன்பாக பஸ் நிலையமும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது எனமேலும் தெரிவிக்கப் படுகிறது.

## திருமலை மாவட்டத்துக்கு 5 உதவி அரச அதிபர்கள் உடனடியாகத் தேவை

திருகோணமலை, செப் 17

திருகோணமலை மாவட்டத்துக்கு ஐந்து உதவி அரசாங்க அதிபர்களும் பதினைந்து உயர் அரசாங்க அதிகாரிகளும் உடனடியாகத் தேவைப் படுகிறார்கள் அரசாங்கத்தின் புனர் நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு இவர்கள் அவசரமாகத்தேவைப்படுகின்றனர். இவ்வாறு திருகோணமலை அரசாங்க அதிபர் திரு. டி. எம். ஆரியரத்தின தெரிவித்துள்ளார்.

அரசாங்க அதிபர் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

அதேவேளை தற்சமயமுள்ள அரசாங்க அதிகாரிகள் எவரையும் மாற்றக்கூடாது என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த மாநாட்டில் அமைச்சர்கள் திரு. காமினி திஸநாயக்கா திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அவர்களிடமே அரச அதிபர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். (ஒ-150)

## மக்களின் அச்சத்தை நீக்கி பாதுகாப்பு அளிப்பதே இந்தியப் படையின் நோக்கம்

### சத்தியேந்திரசிங் கூறுகிறார்

வடமராட்சி, செப். 17

மக்களின் அச்சத்தை நீக்கி பாதுகாப்பு அளிப்பதே எமது நோக்கம்.

இந்திய இராணுவ அதிகாரி லெப்டினன்ட் கேர்னல் சத்தியோந்திர சிங் இப்படித் தெரிவித்தார்.

திக்கம் முகாம் முன்னர் இடம்பெற்ற மறியலைத் தொடர்ந்து உதயன் செய்தியாளர் லெப்டினன்ட் கேர்னல் சத்தியேந்திர சிங்கைப் பேட்டி கண்டார்.

அப்போதே அவர் முன் கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

நாம் இடமாற்றத்துக்காகவே இப்படி முகாமிட்டிருக்கின்றோம்.

இதில் எந்தவித நோக்கமும் இல்லை.

மக்கள் பயந்து வாழும் இடங்களில் அவர்கள் பயந்து வாழும் காரணத்தை அறிந்து பயத்தை நீக்குவதே எமது கடமை ஆகும்.

இதை மக்கள் விரும்பாவிட்டால் 'நாம் பாதுகாப்பாக உள்ளோம். நீங்கள் தேவையில்லை'- என்று சொன்னால் நாம் போய்விடுவோம்.

இப்படி இந்திய இராணுவ அதிகாரி சொன்னார். (இ-எ-160)

## சமய எழுச்சிக்கு பாதயாத்திரை அவசியம்

### 16 நாள் பாதயாத்திரை முடிவில் உரை

சாவகச்சேரி, செப். 17

இளைஞர்கள் மத்தியில் இறை நம்பிக்கையையும் சமய எழுச்சியையும் ஏற்படுத்த திருத்தல பாதயாத்திரைகள் பயனுள்ளவை; அண்மைக் காலங்களில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்களுக்கு சமய உணர்வு அருகியதே காரணமாகும். நாயன்மார்கள் தலயாத்திரைகள் மூலம் சைவத்தையும் தமிழையும் வளர்த்த பாதையில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையாவும் பணிசெய்து வருவது எமக்குப் பெரும் பேறுகும்.

16 தினங்களாக இடம்பெற்ற திருத்தல பாதயாத்திரை நிறைவையொட்டி சாவகச்சேரி ஞானவீரபத்திரர் கோவிலில் நடைபெற்ற வைபவத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு பூ. சுந்தரம் பிள்ளை உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

தேவஸ்தான பிரதம அர்ச்சகர் அ. பரமசாமி ஐயர் யாத்திரை கோஷ்டியினரை வரவேற்று மலர் மாலை சூட்டி விபூதி பிரசாதம் வழங்கினார்.

பாதயாத்திரைக் குழுவின் தலைவர் திரு. நா. முத்தையா, திரு. சிவ மகாலிங்கம் ஆகியோரும் உரையாற்றியதைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெற்றது

சென்ற மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமான இப் பாதயாத்திரைக் குழுவினர் 152 திருத்தலங்களைத் தரிசித்தனர். (இ-31)



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த நோர்வே நாட்டு உயரதிகாரிகள் யாழ். செயலகத்தில் அரச அதிபருடன் உரையாடிக் கொண்டிருப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்: ஜெயம்)

### கொள்ளை

தாளையடி, செப். 17

பயங்கர ஆயுதங்களுடன் சென்ற கோஷ்டி ஒன்று, தோட்டத்திலிருந்தவரைக் கட்டி வைத்துவிட்டு பல ஆயிரம்ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்களையும், பொருள்களையும் கொள்ளை அடித்தது.

முள்ளியான், மண்டலாய் என்னுமிடத்தில் கடந்த சனிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம் பெற்றது.

தண்ணீர் இறைக்கும் இயந்திரம் உட்பட, பல பெறுமதியான பொருள்கள் கொள்ளை அடிக்கப் பட்டன. (இ-144)

## திருமலையில் அதிகமான அரச அதிபர் பிரிவுகள் சிங்களவர் வசமே!

திருகோணமலை, செப். 17

நான்கு அரச அதிபர் பிரிவுகளைக் கொண்டிருந்த திருகோணமலை மாவட்டத்தில் கடந்த இருபது ஆண்டுகளில் புதிதாக ஆறு உதவிஅரச அதிபர் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஐந்து சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக்கொண்டவை. மிகுதி ஒன்றும் முஸ்லிம்களைப் பெரும் பான்மையாகக் கொண்டது.

புதிதாக உருவாக்கப்பட்ட உதவிஅரசஅதிபர் பிரிவில் ஒன்றில் கூட தமிழர் பெரும்பான்மையாக இல்லை.

1960 ஆம்ஆண்டுகளில் திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம், திருகோணமலை நகரம், மூதூர், கட்டுக்குளம் (தற்போது குச்சவெளி என அழைக்கப்படும்) ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளைக் கொண்டிருந்தது

இவற்றில் மூதூரில்மட்டும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகஇருந்தனர் ஏனைய இடங்களில் தமிழரே அதிகமாக இருந்தனர்.

தற்போது கோமரங்கடவல, மொறவெவ, கந்தளாய், சேருவில, பதவிஸ்ரீபுர கிண்ணியா ஆகிய ஆறு பிரிவுகள்புதிதாக உருவாகியிருக்கின்றன. இவற்றில் கிண்ணியா பிரிவுமுஸ்லிம்களை அதிகமாகக் கொண்டது ஏனையவற்றில் சிங்களவர்களே அதிகமாக வாழ்கின்றனர்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிங்கள உதவிஅரச அதிபர் பிரிவுகளுடன் தமிழர்களை பெரும்பான்மையாகக் கொண்ட பிரிவுகளின் பகுதிகள் அண்மைக்காலத்தில் சேர்க்கப்பட்டு வருகின்றன. (உ)

### முற்பணம் இன்னும் இல்லை

பலாலி ஆசிரியர் கலாசாலை பயிற்சி ஆசிரியர்கள் 114 பேருக்கு மூன்று மாத சம்பள முற்பணம் இன்னும் வழங்கப்படவில்லை.

யாழ் மாவட்டத்தில உள்ள சகல அரசாங்க ஊழியர்களுக்கும் இம் முற்பணம் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் வழங்கப்பட்டு விட்டதாகவும் தங்களுக்கு மாத்திரம் இப்பணம் வழங்கப் படாதது அநீதியானது என்றும்-

பயிற்சி ஆசிரியர்களாகிய தங்களில் பலர் அசம்பாவிதங்களின் போது பாதிக்கப்பட்டவர்கள் என்றும்-

வெளிமாவட்டங்களில் பாதிக்கப்பட்ட இடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும்- தங்களுக்கு இப்பணம்கிடைக்க துரித நடவடிக்கைமேற்கொள்ளப்படவேண்டும் என்றும்- முற்பணம் கிடைக்காத பலாலி ஆசிரியர்கள் கவலை தெரிவித்தனர். (ஒ-116)

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## இளைஞர்களுக்கு சனசமூக நிலையங்கள் தொண்டாற்ற முடியும்

கோப்பாய், செப். 17

சனசமூக நிலையங்கள் இளைஞர்களை நல்ல பிரசைகளாக உருவாக்குவதிலும் விளையாட்டு, கலாசாரம், அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் அவர்களுக்கு பயிற்சி அளிப்பதிலும் பங்காற்ற முடியும்.

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக சனசமூக நிலைய திறப்புவிழா சமீபத்தில் நடைபெற்றது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. குலேந்திரன் அங்கு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் சனசமூக நிலையங்கள் இளைஞர்களை நல்ல பிரசைகளாக உருவாக்குவதில் பணிபுரிகின்றன. விளையாட்டு, கலாசாரம், அரசியல், பொருளாதார சமூகத்துறைகளில் அவர்களுக்கு பயிற்சி அளிப்பதில் சனசமூக நிலையங்கள் தொண்டாற்ற முடியும்.

சனசமூக நிலையங்கள் வளர்ந்து வரும் கிராம பகுதிகளுக்கு மிக இன்றியமையாதவை ஆகும்.

இந்த சனசமூக நிலையத்துக்கு அண்மையில் பொது விளையாட்டு மைதானமும் அமைந்திருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது என்றார்.

விழாவின் இறுதியில் கரப்பந்தாட்ட போட்டியும் நடைபெற்றது. (இ-ரி)

### இப்படியும் நடந்தது

அம்பாறை, செப். 17

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சிரேஷ்ட முஸ்லிம் அரசியல்வாதி ஒருவர், கல்முனைப் பகுதியில் இடம்பெற்ற கலவரங்கள் தொடர்பான சமாதான முயற்சிக்குச் சென்று கொண்டிருக்கையில் காரைதீவு கிராமத்தில் வைத்து வழிமறிக்கப்பட்டார்.

அவரது பெறுமதிமிக்க காரின் பின் கண்ணாடி அங்கு திரண்டவர்களில் ஒருவரால் உடைக்கப்பட்டது.

நிந்தாவூரைச் சேர்ந்த முன்னாள் பிரதி அமைச்சரானஜனாப் எம். எம். முஸ்தபாவுக்கே இக்கதி நேர்ந்தது.

இந்த சம்பவத்தை அடுத்து காரைதீவு, நிந்தாவூர்க் கிராமங்களுக்கிடையே பதற்றநிலை தோன்றலாமென எதிர்பார்க்கப் பட்டதாயினும் எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை.

ஜனாப் முஸ்தபாவுடன் கூடச்சென்ற ஒரு முஸ்லிம் நபர் கூட்டத்தினரால் கடத்திச் செல்லப்பட்டாராயினும் உடனடியாக அவர் விடுவிக்கப்பட்டார். (இ-14)

கைதிகள் விடுவிக்கப்படாவிடில்

## அரச நிர்வாகத்தை செயல் இழக்கச் செய்வோம்

### அரச அதிபருக்கு 'கைஸ்' மகஜர்

யாழ்ப்பாணம், செப். 17

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்பேசும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யத் தவறினால் அரசு நிர்வாகத்தைச் செயலிழக்கச் செய்வோம்.

கைஸ் அமைப்பு யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பிய மகஜரில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கின்றது.

மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தடுப்பு முகாம்களில் தமிழ் அரசியல் கைதிகள் இன்னும் சித்திரவதைக்குள்ளாகி வருகின்றார்கள்.

சமாதான ஒப்பந்தத்துக்கு எதிராகக் குழப்பம் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டவர்களுடன் தமிழ்க் கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்குப் போதுமான தகவல்கள் கிடைத்துள்ளன. இலங்கை அரசின் [illegible] என்று நாம் நம்புகின்றோம்.

தமிழ்க் கைதிகள் தொடர்ந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைப் பகிரங்கமாக மீறும் செயலாகும்.

தமிழ்க் கைதிகளின் நிலையை உலகின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டியது எமது கடமை ஆகும்.

சர்வதேச மனித உரிமைச் சாசன விதிகளை மீறிச் சுதந்திரமான விசாரணைகள் நடத்தப் படாமல் தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது மனித உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயலாகும்.

இப்படி கைஸ் அமைப்புச் செயலாளர் எஸ். ரமேஷ், யாழ். அரசஅதிபருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் கூறியிருக்கின்றனர். (இ-எ)

### ஆதீனத்தில் யோகாசன வகுப்புகள்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வெள்ளிக்கிழமை தவிர ஏனைய நாட்களில் காலையிலும் மாலையிலும் யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

சுவாமி ஸ்ரீ சித்தானந்த யோகியினால் நடத்தப்படும் இவ்வகுப்புக்களில் கலந்து கொள்வோர் தொய்வு,நீரிழிவு, வாத நோய் ஆகிய நோய்களைக் குணமாக்க முடியும் எனச் சொல்லப்படுகிறது.

யோகாசனப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புவோர் நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் சுவாமி நாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். (இ-161)

### வல்லை வீதி அவல நிலை

சங்கானை, செப் 17

சங்கானை வல்லை வீதி பல ஆண்டுகளாக பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது

வீதியின் அவல நிலையால் தொட்டிலடி, சேத்துப்பிடிச்சி விவசாயிகளும், ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளிகளும் பாதிக்கப்படுகின்றனர். (இ-29)

மக்கள் முகம்

### புளியந்திவு நாகேஸ்வரன் கோவில் நிர்வாகிகள்

அனலைதீவு, செப். 17

அனலைதீவைச் சேர்ந்த பிரசித்திபெற்ற புளியந்தீவு நாகேஸ்வரன் கோவில் பொதுக் கூட்டம் அண்மையில் தலைவர் திரு. வை. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது.

தலைவராக திரு. க. தம்பையாவும் செயலாளராக திரு. வை. சிவராசாவும் முகாமையாளராக திரு. க. சண்முகமும் பொருளாளராக திரு. வே. சேதுகாவலரும் மேலும் புதிகாகப் பதினொரு நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-18)

### சிறுவர்களுக்குப் பால்மா வழங்கப்படும்

மன்னார், செப். 17

மன்னாரில் இயங்கும் ஐக்கிய இராச்சியத்தின் சிறுவர் பாதுகாப்பு நிதிய பிரதிநிதி மூலம் சிறுவர்களுக்கும் கர்ப்பிணிகளுக்கும் பால்மா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் புனர்வாழ்வு அமைச்சு மன்னார் பகுதிக்கு 25 கிலோ இரும் கொண்ட 200 பெட்டி பால்மாவை வழங்கியுள்ளது.

இவை இங்குள்ள 12 வயதுக்குற்பட்டவர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கும் வழங்கப் பட இருக்கின்றன. (ஒ-95)

## சாரண ஆணையாளர் யாழ்ப்பாணம் வருகிறார்

மானிப்பாய், செப் 17

இலங்கை சாரணர் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள்பற்றி கலந்துரையாடவென இலங்கை சாரணர் சங்கப் பிரதம ஆணையாளர் திரு. றெக்ஸ் ஜெயசிங்கா யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இம்மாதம் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ள திரு. றெக்ஸ் ஜெயசிங்கா நான்குநாட்கள் இங்கு தங்கி நிற்பார்.

இங்கு நிற்கும் வேளையில் அதிபர்கள் கருத்தரங்கு, சாரணத் தலைவர்கள் ஒன்று கூடல், சாரணர்- பெற்றோர் சந்திப்பு யாழ் மாவட்ட சாரணர் புனருத்தாரணம் ஆகிய நிகழ்ச்சிகளில் அவர் பங்கு கொள்வார்.

யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர், கல்வி அதிகாரி திரு. கே. குலசேகரம் காங்கேசன் துறை மாவட்ட சாரணர் சங்க ஆணையாளர் திரு. என். போஜன் ஆகியோர் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர், [இ-90]

### மக்கள் ஆதரவு

சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. திலீபனுக்கு ஆதரவு தெரிவித்து குருநகர், சின்னக்கடை, பாசையூர், கொழும்புத்துறை பொதுமக்கள் அறிக்கைகள் வெளியிட்டனர்.

குருநகர் சனசமூக நிலைய முன்றலில் ஒலிபெருக்கி பூட்டிய வாகனத்தில் உண்ணாவிரதத்துக்கு ஆதரவான வாசகங்கள் ஒலிபரப்பப் பட்டன. (இ-51)

# விளையாட்டரங்கு

## நாளை கட்டுவன் புலம் வித்தியாலயவிளையாட்டு போட்டி

பலாலி, செப்: 17

யா / கட்டுவன் புலம் மகா வித்தியாலயத்தின் இல்லங்களுக்கிடையேயான வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறவுள்ளன.

அதிபர் திரு. க. இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூரும், யாழ். பல்கலைக்கழகக் கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் ப. சந்திரசேகரமும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (ஒ-119)

### தாச்சிச் சுற்றுப்போட்டி

கைதடி, செப். 17

கைதடி செல்வா சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப்போட்டி 19 ஆம் திகதி தொடக்கம் நடைபெற உள்ளது.

இச் சுற்றுப் போட்டி கைதடி வடக்கில் நடைபெற உள்ளது. போட்டிக்கான ஏற்பாடுகளை நிலைய அங்கத்தவர்கள் மேற்கொண்டுள்ளனர். (இ-74)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

மழை வீழ்ச்சியின் தன்மை, நிலத்தின் ஈரத்தாற் காணப்படும். பக்தியின் சாதனை, அடைந்த அமைதியாற் காணப்படும்.

— பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24800 22078
17.9.1987 த.பெ.இல: - 23

# அளவுக்கு மிஞ்சினால்...

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த இக்ரத்தில் இந்திய இராணுவத்தினர் முகாம் ஒன்றை அமைக்க முயன்று தோல்வி கண்டுள்ளார்கள். அப்பகுதி மக்கள் காட்டிய எதிர்ப்பினால், துருப்புகள் நிலைகொண்ட சிறிது நேரத்தில் முகாமை இடம் மாற்ற வேண்டியதாயிற்று.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இங்கு வந்திருப்பது இந்திய அமைதிப்படை. வடக்கு, கிழக்கில் ஸ்ரீலங்கா இராணுவமும் தமிழ்ப் போராளிகளும் நடத்திய போரை நிறுத்தி, அமைதியை ஏற்படுத்துவதற்கா அல்லது கண்காணிப்பதற்கா அது இங்கு வருவிக்கப்பட்டது

ஸ்ரீலங்கா அரசின் ஆதிக்கத்தையும், ஆக்கிரமிப்பையும் எதிர்த்துத் தமிழ்ப் போராளிகள் ஆயுதப் போராட்டம் நடத்தி வந்தார்கள். அத்தோடு ஸ்ரீலங்கா இராணுவம் நடத்திய இன ஒழிப்பிலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாத்தும் வந்தார்கள்.

இந்திய அமைதிப்படை இங்கு வந்ததும் போராளிகள் தமது ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டியதாயிற்று. அதன் விளைவாக தமிழ் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்புத் தானாகவே இந்திய அமைதிப்படையிடம் போய்ச் சேர்ந்தது.

வடக்கு கிழக்கிற்கு வந்திருப்பது அமைதிப்படையே அன்றி யுத்தம் செய்ய வந்த அல்லது ஆக்கிரமிப்புச் செய்ய வந்த துருப்புக்கள் அல்ல என்று இந்திய அதிகாரிகள் அடிக்கடி கூறிவருகிறார்கள். அந்த நிலைப்பாட்டையே தமிழ் மக்களும் விரும்புகிறார்கள்.

ஆக்கிரமிப்பும், அடாவடித்தனமும் புரிவதற்காக, ஸ்ரீலங்கா படைகளின் இடத்தை நிரப்ப வந்த, இராணுவமாக இந்தியப்படை இருக்கக் கூடாது என்பதே தமிழ் மக்களின் விருப்பம். தங்கள் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தி, தங்கள் நலன்களைப் பாதுகாக்கும் படையாகவே அமைதிப்படை விளங்க வேண்டும் எனவும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக அல்லது எதிராக செயற்படுவதற்கு இந்திய அமைதிப்படையினர் முயலக்கூடாது.

வடக்கு, கிழக்கில் இருந்து ஸ்ரீலங்காப் படைகள் முற்று முழுதாக இன்னமும் வாபஸாகவில்லை அவை தமது முந்திய 'சேஷ்டை'களைப் பகிரங்கமாக இல்லாவிடினும், மறைமுகமாகவேனும் செய்ய முற்படலாம். எனவே தமிழ் மண்ணில் இருந்து சிங்கள ஆதிபத்தியத்தின் சின்னங்களான அரசபடைகளை முற்று முழுதாக அனுப்பி வைக்க வேண்டும். அந்தப் பணியை இந்திய அரசுதான் செய்யவேண்டும்.

ஆனால் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்ற பேரில் வடக்கு கிழக்கில் அளவுக்கு அதிகமான முகாம்களை நிறுவ இந்திய அமைதிப்படை முயற்சி எடுக்கக்கூடாது. அவ்வாறு செய்யின், தமிழ் மக்கள் இந்திய இராணுவத்தை சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தொடங்குவர். அவ்வாறான ஒரு மனப் பிரதிபலிப்பையே இக்கம் சம்பவம் காட்டுகிறது. இதனை இந்திய அதிகாரிகளும், அரசும் நன்கு உணர்ந்து கொண்டிருப்பார்கள் என நம்புகிறோம்.

கிராமத்துக்குக் கிராமம் இராணுவ முகாம்கள் அமைத்தால் ஏதோ பெரிய திட்டத்துடன் தான் அப்படிச் செய்யப்படுவதாக எவரும் சந்தேகிக்கவே செய்வர்.

தமிழ்ப் போராளிகளிடம் இருந்து முழு ஆயுதங்களையும் பெற்றவுடன் இந்திய இராணுவத்தைத் தாம் திருப்பி அனுப்பிவிடப் போவதாக ஜனாதிபதி ஜே. ஆர். சொன்னார்.

இல்லை, இல்லை மாகாண சபைத் தேர்தல்கள் முடிந்து நிலைமை முழு அளவில் சீராகும் வரை இந்தியப்படை இங்கு நிலைகொண்டிருக்கும் என்று இந்திய உயர் அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

இவற்றின் மத்தியில் இந்திய இராணுவம் இங்கு பணிபுரியப்போகும் கால எல்லை குறித்து ஊர்ஜிதமற்ற விதத்தில் பல "கசமுசாக்கள்" பேசப்படுகின்றன. கிராமத்துக்குக் கிராமம் முகாம்களை நிறுவ இந்தியா நடவடிக்கை எடுத்தால், பேசப்படும் வதந்திகளை உண்மையாக்குவதாக முடியும்.

எனவே இந்தியா தனது இராணுவ முகாம்களை ஆகக்கூடியது தொகுதிக்கு ஒன்றாக அமைத்துக்கொண்டால் போதுமானதாகும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகிவிடும்.

## சாரணர் கருத்தரங்கு

சாரணர் தலைவர்களின் கருத்தரங்கு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ் கல்விப் பணிப்பாளர் ஜனப் எம். எம். மன்சூரும் சிறப்பு விருந்தினராக ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானமும் கலந்து கொள்வர்.

கருத்தரங்கு மாவட்ட ஆணையாளர் திரு. செ. வரதலிங்கம் தலைமையில் நடைபெறும். (இ)

# டாக்காவை முற்றுகையிட்டும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

## எர்ஷாத்தைக் கவிழ்க்க எதிர்க்கட்சிகள் திட்டம்

டாக்கா, செப். 16

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவை முற்றுகையிடும் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை எதிர்க்கட்சிகள் இம்மாதம் 26 ஆம் திகதி ஆரம்பிக்க இருக்கின்றன.

ஆறு வாரங்களுக்குத் தொடர்ந்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் இடம்பெறும்.

மூன்று பெரிய எதிர்க்கட்சிக் கூட்டணிகள் நாடு எங்கும் பொதுக் கூட்டங்களை நடத்தும்.

நவம்பர் 10 ஆம் திகதி 'டாக்கா' முற்றுகையிடப்படும்.

இப்படி மூன்று எதிர்க்கட்சிக் கூட்டணிகளும் திட்டமிட்டுள்ளன.

ஜனாதிபதி முகமட் எர்ஷாத்தையும் அவரின் அரசாங்கத்தையும் பதவி விலக நிர்ப்பந்திப்பதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

இப்படி பிரதான எட்டுக் கட்சிக் கூட்டணித் தலைவரான கமால் ஹைதர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி அமைப்புக்களின் அலுவலகங்களையும் முற்றுகையிடவும் எதிர்க்கட்சிகள் எண்ணியுள்ளன.

(இ-எ)

## பாரதிய ஜனதா தொண்டர் மீது தாக்குதல்

புதுடில்லி, செப் 16

பாரதிய ஜனதாக் கட்சியின் தொண்டர்கள் பொலிஸாரின் குண்டாந்தடிக்கு இலக்கானார்கள்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை புதுடில்லியில் இடம் பெற்றது.

நீதி கோரிப் போராடும் இயக்கம் ஒன்றை பாரதிய ஜனதாக்கட்சி நடத்தி வருகின்றது

அதன் ஒரு கட்டமாக கட்சித் தொண்டர்கள் செவ்வாய் புதுடில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போதே இச்சம்பவம் இடம்பெற்றது

"பொலிஸாரின் நடவடிக்கை தேவையற்றது'

இப்படி கட்சித்தலைவர் எல். கே அத்வானி தெரிவித்தார். (இ-எ)

## ஷாவின் முத்திரைக்கு வந்த கிராக்கி

நியூயோர்க், செப். 16

ஈரானின் முன்னாள் மன்னர் ஷாவின் படத்தைத் தலைகீழாகக் காட்டும் நான்கு முத்திரைகள் 2 லட்சம் டாலருக்கு ஏலத்தில் விற்பனையாகின

இம்முத்திரைகள் 30 ஆண்டுகளுக்கு முன்னர் அச்சிடப்பட்டன. வாஷிங்டனில் இப்போது தான் அவை கண்டுபிடிக்கப்பட்டன.

கடந்த திங்கள் இந்த ஏலம் இடம் பெற்றது

## பீக்கிங்கில் தைவான் பத்திரிகையாளர்கள்

பீக்கிங், செப். 16

தைவான் அரசின் தடை உத்தரவை மீறி இரண்டு தைவான் பத்திரிகையாளர்கள் சீனாவுக்கு விஜயஞ்செய்துள்ளனர்

1949 இல் சீனாவைக் கம்யூனிஸ்ட்கட்சி கைப்பற்றியபின்னர் பீக்கிங்குக்கு விஜயம் செய்த தைவான் பத்திரிகையாளர்கள் இவர்கள் ஆவர்.

லி - யுன் - டெஹ், ஹிஸீலூ ஆகியோரே அப் பத்திரிகையாளர்கள்.

திரும்பிச்சென்ற பின்னர் தைவான் அரசு எம்மைச் சிறையிலிடக் கூடும். அதுபற்றி நாம் பயப்படவில்லை. இப்படி அவர்கள் தெரிவித்தனர்.

தைவான் மக்கள் பீக்கிங்கில் உள்ள உறவினர்களைப் பார்க்க தைவான் அரசு விரைவில் அனுமதியளிக்கும் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

(இ-எ)

# அணு ஆயுத யுத்தம் தவறுதலாகஏற்படுவதை தடுக்கும் ஒப்பந்தம்

வாஷிங்டன், செப். 16

அணுஆயுத யுத்தம் ஒன்று தற்செயலாக ஏற்படுவதைத் தடுக்க வகை செய்யும் ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்காவும் சோவியத் யூனியனும் செய்துகொண்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை ஒப்பந்தத்தில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸும் சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெர்வான்ட்ஸேயும் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் படி 'ஆபத்தைக் குறைக்கும் நிலையங்கள்' இரண்டு நாடுகளிலும் அமைக்கப்படும்.

★ தவறானவிளக்கங்கள்.

★ பிழையாகக் கணக்கிடுதல்.

★ பயங்கரவாதம்.

இந்தக் காரணங்களினால் தற்செயலாக அணு ஏவாயுதங்கள் பயன்படுத்தப்படுவதை இந்த ஒப்பந்தம் தடுக்கின்றது.

இத்தவறுகளினால் தற்செயலாக அணு ஆயுத யுத்தம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள இருதரப்பிலும் கண்காணிப்புக்குழுக்களை நிறுவவும் இந்த ஒப்பந்தம் வழி செய்கின்றது.

நிரந்தர சமாதானம் ஒன்றை உலகில் ஏற்படுத்தும் முயற்சிகளில் இந்த ஒப்பந்தம் முதல்படி — இப்படி அமெரிக்க அதிபர் றேகன் பாராட்டினார். (இ-எ)

## லெபனானில் தேர்தல் கோரிக்கை

கராச்சி, செப் 16

பாகிஸ்தானின் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண சுதந்திரத் தேர்தல் ஒன்று நடத்தப் படவேண்டும்

பாகிஸ்தான் மக்கள் கட்சித்தலைவி பெனாஸிர் பூட்டோ முன் கண்டவாறு தெரிவித்தார்

ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் செல்வி பூட்டோமேலும் சொன்னதாவது;

இராணுவச் சட்டம் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

எனது கட்சி பாகிஸ்தானில் பூரண ஜனநாயகம் நிலவவே பாடுபடுகின்றது.

இப்படி பெனாஸிர் தெரிவித்தார். (இ-எ)

## சோவியத் அமைச்சர்கள் பேசுவர்

நியூயோர்க், செப் 16

ஐ நா பொதுச்சபைக் கூட்டத்தில் சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெர்வான்ட்ஸே இம்மாதம் 23ஆம் திகதி உரையாற்ற இருக்கின்றார்.

ஐ நாவின் 42ஆவது பொதுச்சபைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது

(இ-எ)

## பூரிஸ்வாமிகள் காயம்

புதுடில்லி, செப் 16

பூரி சங்கராச்சாரிய ஸ்வாமிகள் நேற்று உத்தரப்பிரதேச பாநிலத்தில் ஜீப் விபத்தொன்றில் காயமடைந்தார்.

அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அவர் சென்ற ஜீப்பின் சாரதியும், சீடர் ஒருவரும் உயிரிழந்தனர்.

(ஓ எ)

# ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மீண்டும் மடாதிபதி ஆனார்!

காஞ்சி, செப்டெம்பர் 16

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் மீண்டும் காஞ்சி காமகோடி மடாதிபதியானார்

காஞ்சி மடத்தை விட்டு வெளியேறிய ஸ்வாமிகள் தலைக்காவேரியில் ஆச்சிரம வாசம் மேற்கொண்டார்.

பின்னர் பரமாசாரிய ஸ்வாமிகள் ஸ்ரீ சந்திரசேகர ஸ்வாமிகளைத் தரிசிக்க மீண்டும் காஞ்சிக்கு வந்தார்.

இதைத் தொடர்ந்து மீண்டும் காஞ்சி காமகோடி பீட மடாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டார்.

காஞ்சி மடத்தின் தற்போதைய சங்கராச்சாரியராக ஸ்ரீ ஜயேந்திர ஸ்வாமிகள் தொடர்ந்து பணியாற்றி வருவார் என்று அறிவிக்கப்படுகின்றது.

ஸ்வாமிகள் மடத்தைவிட்டு வெளியேறியதைத் தொடர்ந்து 70 ஆவது சங்கராசாரியராகப் பதவி ஏற்ற 18 வயது நிரம்பிய ஸ்ரீ சங்கர விஜேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் பால சங்கராச்சாரியராக நியமிக்கப்பட்டார்.

(இ-எ)

## வெளி உலகில்

# பலஸ்தீன விடுதலை ஸ்தாபன அலுவலகங்கள் 30 தினங்களில் மூடப்படும்

வாஷிங்டன், செப் 16

முப்பது தினங்களுக்குள் வாஷிங்டனில் உள்ள சகல அலுவலகங்களையும் மூடிவிட வேண்டும் என்று பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது

இத்தகவலை அமெரிக்க ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் சார்ள்ஸ் ரெட்மன் தெரிவித்தார்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள் சில அமெரிக்காவுக்கு உடன்பாடானதாக இல்லை. அதனால் தான் இந்த நடவடிக்கையை எடுக்க நேர்ந்தது

ஐநாசபையில் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு அவதானிஅந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக நியூயோர்க்கில் அதன் காரியாலயம் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இப்படி திரு. ரெட்மன் மேலும் தெரிவித்தார். (இ-எ)

# ஆயுதத்தடை ஈரானை பாதிக்காது என்கிறார் பிரதமர் முஸாவி

தெஹ்ரான், செப். 16

ஐ நா. பாதுகாப்புச் சபையினால் விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் ஆயுதத்தடை ஈரானைப் பாதிக்காது.

இப்படி ஈரான் பிரதமர் முஸவி தெரிவித்தார்

ஐ நா. பொதுச்செயலாளர் பெரஸ்டி குயிலர் தனது வளைகுடா சமாதானப் பயணத்தை முடித்துக் கொண்டு நியூயார்க்குத் திரும்பிய சமயம், ஈரானிய பிரதமர் முன் கண்ட கருத்தை வெளியிட்டார்.

"வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் ஆயுதங்கள் எமக்குத் தேவையில்லை, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஆயுதங்கள் எமக்குப் போரை நடத்தப் போதுமானவை"- இப்படி ஈரான் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

ஐ.நா. பொதுச்செயலாளர் பெரைஸ்டி குயிலரின் சமாதான முயற்சிகள் பயனளிக்கவில்லை என்று ராஜதந்திரவட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இத்தருணத்தில் ஈரானில் பிரதமர் வெளியிட்ட கருத்து, ஐ நா. பாதுகாப்புச்சபை ஈரான் மீது ஆயுதத் தடையை விதிக்கும்படி சிபார்சு செய்யலாம் என்ற ஊகத்தை ஏற்படுத்தி உள்ளது.

பொதுச்செயலாளர் தெஹ்ரான், பக்தாத் ஆகிய தலைநகர்களில் தலா இரண்டு னங்கள் தங்கி பேச்சுக்களை நடத்தினார்.

இப்பேச்சுக்களின் போது ஈராக்கை ஆக்கிரமிப்பு நாடு என்று பிரகடனப்படுத்தும் படி ஈரானும் ஈரானை ஆக்கிரமிப்பு நாடு என்று பிரகடனப்படுத்தும் படி ஈராக்கும் ஐ நா. பொதுச்செயலாளரைக் கேட்டுக் கொண்டன. வளைகுடாப் பயணம் பற்றிய அறிக்கை ஒன்றை பொதுச்செயலாளர் பெரஸ்டி குயிலர் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு நேற்றுச் சமர்ப்பிக்கவிருந்தார். (இ-எ)

## ஐ. நா. வில் ரஷ்ய மொழி!

ஐ. நா. செப். 16

ஐ. நா. பொதுச்சபை நேற்று முதல் தடவையாக ரஷ்ய மொழியில் தனது நடவடிக்கைகளை நடத்தியது.

இதற்குக்காரணம் கிழக்கு ஜேர்மன் உதவி வெளிநாட்டமைச்சர் பீட்டர் புளோரின் பொதுச்சபையின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டதே ஆகும்.

புதிய தலைவர் ரஷ்ய மொழியில் பேசிக் கூட்டத்தை நடத்தினார்.

(இ-எ)

# அரச திணைக்களங்களுக் . . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தேவைகள் ஆராயப்பட்டு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

ஒரு ஏக்கர் விவசாயம் மேற்கொள்வதற்கு ஒரு குடும்பத்திற்கு 1,500 ரூபா புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படுவதாக திரு. ஒஸ்டின் பெர்னாண்டோ கூறினார்.

நீர்ப்பாசனம் சம்பந்தமாக ஆராயப்பட்டு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 5 லட்சம் ரூபா வழங்கப்பட்டது. நீர்ப்பாசனத்திற்கு ஏற்பட்ட மொத்த அழிவு ரூபா 45 லட்சமாகும்.

### மின்சாரம்

மின்சாரம் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டது. அனுராதபுரத்திற்கும் திருமலைக்கும் இடைப்பட்ட பகுதியில் ஏழு கோபுரங்களும் ஹபறணையிலிருந்து- திருமலைக்கும் இடைப்பட்ட பகுதியில் 8 கோபுரங்களும் முற்றாகச் சேதமடைந்துள்ளன என்று கூறப்பட்டது.

### போக்குவரத்து

போக்குவரத்து தொடர்பாக ஆராயப்பட்டு உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

திருமலை டிப்போவில் ஏழு பஸ்கள் டயர் இல்லாமல் ஓடமுடியாதிருப்பதாகவும், ஆறு பஸ்கள் கடந்த காலங்களில் எரிக்கப்பட்டதாகவும் தற்சமயம் 9 பஸ்களே சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் இ. போ. ச. அதிகாரி கூறினார்.

டயர்களை வாங்குவதற்காக 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபா [illegible] யாகத் தான் வழங்[illegible] சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கும் படியும் திரு ஒஸ்டின் பெர்னாண்டோ இ. போ. ச. அதிகாரியைக் கேட்டுக் கொண்டார்.

பாதைகள் மதகுகள், துறைகள் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட நஷ்டம் ஐந்து கோடியாகும். இதில் 21 லட்சம் ரூபா உடனடியாக வழங்கப்பட்டது.

### தொலைத்தொடர்பு

தந்தி, தொலைத் தொடர்பு நிலையங்களுக்கு ஏற்பட்ட மொத்த நஷ்டம் 2 கோடி ரூபாவாகும் என்று தொலைத் தொடர்பு எஞ்சினியர் திரு. கனகசூரியர் கூறினார்.

இந்த மாநாட்டில் வைத்தே திரு. ஒஸ்டின் பெர்னாண்டோவினால் [illegible] ரூபா 45 லட்சம் ஆகும். (ஓ-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னும் 5 வருடங்களில்

# வாக்காளர் எண்ணிக்கை ஒரு கோடி ஆகிவிடும்!

கொழும்பு, செப், 17

அடுத்த ஐந்தாண்டு காலங்களில் இலங்கையின் வாக்காளர் எண்ணிக்கை 1 கோடியாகிவிடும்.

இப்படி தேர்தல் திணைக்களவட்டாரங்கள் தெரிவித்தன.

1986 வாக்காளர் பட்டியலின்படி வாக்காளர் எண்ணிக்கை சுமார் 91 லட்சமாகி விட்டது.

ஆண்டு தோறும் ஒன்றரை லட்சம் முதல் இரண்டு லட்சம் வரை வாக்காளர் எண்ணிக்கை அதிகரிப்பு உண்டு.

ஒத்தி வைக்கப்பட்ட பிரதேச மற்றும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலகள் 1986 வாக்காளர் பட்டியலின் படியே நடத்தப்படும்

1987 வாக்காளர் பட்டியல் மீளாய்வு செய்யப் (6 ஆம் பக்கம் பார்க்க)

## தூக்குக் கயி . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றுஇக்கதிக்குள்ளாகியிருப்போமா என்று நாம் ஊன்றிச் சிந்திக்க வேண்டும்.

நிலைமை ஓரளவுமோசமாகிவிட்ட போதிலும், தமிழினத்தின் விடுதலையைப் பெறுவதுசாத்தியமாகவே இருக்கிறது தமிழரசுத் தந்தை வழிகாட்டியாக நின்று அழைத்துச்செல்லும் வழிப்படி தமிழினம் ஏகோபித்து நடந்தால் விடுதலையை நாம் பெற்றே தீருவோம்.

(25,00000 மக்கள்தலைவர்)

## முன் கூட்டியே தெரிவித்திருந்தார்

கொழும்பு, செப் 17

நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம் பெற்ற கிரனேட் தாக்குதல் பற்றி பொலிஸாரால் தேடப்பட்டுவரும் அஜித் குமார் என்பவர் தாக்குதல் பற்றி தனது நண்பர்களுக்குமுன் கூட்டியே தெரிவித்து இருந்தாராம்

பொலிஸ் விசாரணையில் இது வெளியாகி இருக்கின்றது.

அஜித் குமார் நடத்திய வகுப்புக்களில் கலந்து கொண்டதாகக் கூறப்படும் மூன்று இளம் பெண்களை பொலிஸார் வார இறுதியில் கைது செய்தனர்.

நாடாளுமன்றக் கட்டடத் தாக்குதல் பற்றி இம்மூன்று இளம் பெண்களுக்கும் முன்னரே தெரிந்து இருந்ததாம். (இ-எ)

நியாயமான விலைகளில்
நவீன ஜவுளி ரகங்கள்
உங்கள் தேவைகளுக்குரிய நவீன
ரகங்களைத் தேர்ந்தெடுக்க
இன்றே வருகை தாருங்கள்

மயூரா சென்ரர்
13 B நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

17 - 09 - 1987 வியாழக்கிழமை

சிறந்த றெடிமேட் ஆடைகள்
நீங்கள் விரும்பும் கண்கவர்
வண்ணங்களின் நவீன ரக
றெடிமேட்
உடைகளைத் தேர்ந்தெடுக்க
சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13 B நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

மட்டக்களப்பு பிரசைகள் குழுச் செயலாளர்

## சாம் தம்பிமுத்துவைத் தேடி

## துப்பாக்கியுடன் சென்ற முகமூடிகள்

கொழும்பு, செப். 17
மட்டக்களப்பு பிரசைகள் குழுச் செயலாளர் சாம் தம்பிமுத்துவைத் தேடித் துப்பாக்கியுடன் இரண்டு முகமூடி மனிதர்கள் நேற்றுப் பகல் அவரின் வீட்டுக்குச்சென்றனர்.

சாம் தம்பிமுத்து எங்கே? —இப்படி அந்த முகமூடி மனிதர்கள் வீட்டில் இருந்தவர்களைக் கேட்டனர்.

''அவர் கொழும்புக்குச் சென்றுவிட்டார்'' என்று வீட்டில் இருந்தவர்கள் பதில் அளித்தனர்.

அதைத் தொடர்ந்து துப்பாக்கி முகமூடி மனிதர்கள் திரும்பிச்சென்றுவிட்டனர்.

பி.பி.சி கொழும்புச் செய்தியாளர் ஜோன் றெற்றி நேற்று இரவு இதனைத் தெரிவித்தார்.

இச்சம்பவம் உடனடியாக அப்போது நடந்துகொண்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் மாநாட்டுக்கு அறிவிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் இந்திய இராணுவத்தின் தென் பிராந்தியத் தளபதி லெப்டினனட்ஜெனரல் தெபிந்தர்சிங்கும் கலந்துகொண்டார்.

முதல் நாள் [செவ்வாய்] இரவு சம்மாந்துறையில் உதவி அரச அதிபர் விக்னராசா சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமும் இம்மாநாட்டிற் கலந்துகொண்டவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் கிழக்கில் நிலவும் அமைதியின்மை ஆராயப்பட்டது.

லெப்டினன்ட் ஜெனரல் திபெந்தர்சிங் மாநாட்டில் கலந்துகொண்டது கிழக்குச் சம்பவங்களுக்கு இந்திய அமைதிப் படை வழங்கும் முக்கியத்துவதை எடுத்துக் காட்டுவதாக இருந்ததாக திரு. ஜோன் றெற்றி நேற்று இரவு அறிவித்தார். (இ-எ)

## புளொட்.ஈ பி. ஆர்.எல்.எப்

### உறுப்பினர்கள் பலர் ஆயுதப்படை முகாம்களில் தஞ்சம்

மட்டக்களப்பு, செப். 17
மட்டக்களப்பு — அம்பாறை மாவட்டங்களில் புளொட், ஈ. பி. ஆர். எல். எப். இயக்க உறுப்பினர்கள் பலர் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து அந்த இயக்கங்களின் உறுப்பினர்கள் பாதுகாப்புக் கோரி ஸ்ரீலங்கா பொலீஸ் நிலையங்களிலும் ஆயுதப்படை முகாம்களிலும் இந்திய அமைதிகாக்கும் படை முகாம்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இரு மாவட்டங்களிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் 250 பேர் வரை இப்படித் தஞ்சம் புகுந்தனர்.

தஞ்சம் புகுந்த அனைவரும் மட்டக்களப்பு இணைப்பதிகாரி அலுவலகத்தில் வைத்து இணைப்பதிகாரி திரு. நிமால் டி சில்வாவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த ஒப்படைப்பு வைபவம் இடம்பெற்ற நேரத்தில் பிரசைகள் குழு, அரச அதிபர், இந்திய அமைதி காக்கும் படைஅதிகாரிகள் ஆகியோர் சமூகம் கொடுத்திருந்தனர்.

தஞ்சம் புகுந்த நபர்களுக்கு முகாம்களில் படுக்கை வசதிகள் உட்பட சகல வசதிகளையும் உள்ளடக்கிய கட்டடம் ஒன்று ஒதுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களைப் பொறுப்பேற்றுள்ள இணைப்பதிகாரி நிமால் டி சில்வா உரையாற்றுகையில் தஞ்சம் புகுந்துள்ள சகலருக்கும் போதிய பாதுகாப்பு வழங்கப்படும். படுக்கை. உணவு உட்பட சகல வசதிகளும் இவர்கள் விருப்பத்துக்கேற்ப வழங்கப்படும் என்றுர்.

உறவினர்கள், குடும்ப உறுப்பினர்கள் எந்நேரமும் வந்து, இவர்களைச் சந்தித்துக்கொள்ளலாம்.

தமது வெளி நடமாட்டத்துக்கு இனி ஆபத்து வராது என்று இவர்கள் கருதும் பட்சத்தில் இவர்களை ஒப்படைத்தபோது கலந்து கொண்டவர்கள் முன்னிலையிலேயே இவர்களை விடுவிப்பேன். இவர்களை நாம் கைதிகளாகக் கருதமாட்டோம் — என்றுர். (இ-21)

## ஆயுதபாணிகளான சிலர்

### எமது வானை மறித்துச் சுட்டனர்

### உயிர் தப்பிய புளொட் உறுப்பினர் மரண விசாரணையில் தகவல்

மட்டக்களப்பு, செப். 17
சம்பவதினம் மட்டக்களப்பில் அலுவல்களை முடித்துக்கொண்டு காரைதீவுக்குத் திரும்பிக்கொண்டிருக்கையில் ஆயுதபாணி கும்பல் ஒன்று எமதுவாகனத்தை மறித்து நிறுத்தி துப்பாக்கிப்பிரயோகம் செய்தது.

மட்டக்களப்பு — கல்முனை வீதி கிரான்குளம் பஸ் பயணிகள் கொலை மரண விசாரணையில் சாட்சியமளித்த வாகனச் சாரதியும் புளொட் பிரமுகருமான நந்தா எனப்படும் ஜோன்கிறிஸ்தோபர் (22 வயது) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்பவத்தில் ஹரிகரன் (27 வயது) - பழகாமம், அழகுதுரை (26 வயது) - கருவப்பன்கேணி, மென்டிஸ் 28 வயது - புன்னைச்சோலை, திலகராஜ் (23 வயது) - செங்கலடி, இளங்கோ (23 வயது) - காரைதீவு, நாகேந்திரன் (27 வயது) - பாண்டிருப்பு, பங்கஜவதி [42 வயது] - காரைதீவு, கங்கேஸ்வரி [32 வயது] - காரைதீவு, பூமணி [32 வயது] - காரைதீவு ஆகியோர் கொல்லப்பட்டனர்.

மரண விசாரணை பதில் நீதிபதி திரு கே.வேலுப்பிள்ளை முன்னிலையில் நடைபெற்றது.

சாட்சி மேலும் கூறியதாவது :-

மட்டக்களப்பில் அலுவல்களை முடித்துவிட்டு திரும்பிய எமது வாகனத்தில் 9 புளொட் உறுப்பினர்களுடன் ஓர் ஈ. பி. ஆர் எல் எப். உறுப்பினரும் இருந்தோம்.

எமது வாகனத்தில் போதிய இடமிருந்ததால் பயணிகளையும் ஏற்றிக்கொண்டு காரைதீவு நோக்கிப் புறப்பட்டோம்.

கிரான்குளத்துக்கு அருகில் வீதியின் குறுக்காக வான் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது நான் எமது வாகனத்தை நிறுத்த வீதியின் இருமருங்கிலும் ஆயுதபாணிகளாக நின்றவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். நானும் சிலரும் இறங்கி ஓடித் தப்பிவிட்டோம். 9 பேர் இறந்து விட்டார்கள் என்று பின்பு அறிந்தேன்.

இப்படி அவர் கூறிஞர்.

விசாரணை முடிவில் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. [இ-21]

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை

### தொழில் நுட்ப பயிலுநர் தேவை

செயற்கை அவயவங்கள் செய்து வலது குறைந்தவர்களுக்கு பொருத்துவதில் பயிற்சி பெறுவதற்கு சேவை மனமுள்ள ஆர்வமுள்ள இளைஞர் தேவை. உலோகவேலை, ஒட்டுனர் வேலை, மரவேலை, ஆகியவற்றில் ஓரளவுக்கு பயிற்சி பெற்றவர் 25-09-87 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

வயது குறைந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

காரியதரிசி
ஜெய்ப்பூர் தொழிற்சாலை
5, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 / 2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 17 - 09 - 87ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on 17 - 09 - 1987.

### வாக்காளர்---
(5-ம் பக்கத் தொடர்ச்சி)
படுகின்றது. பொது மக்கள் பார்வைக்கு இப் பட்டியல் நவம்பரில் வைக்கப்படும்.

1986 பட்டியலில் சேர்க்கப்படாமல் விடுபட்ட தகுதிவாய்ந்த வாக்காளர்கள் 1987 பட்டியலில் தங்கள் பெயர்களைச் சேர்ப்பிக்கும்படி விண்ணப்பிக்கலாம்.

இப்படி தேர்தல் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)


### போராட்டத்துக்கு
(1ம் பக்கத் தொடர்ச்சி)
டுக் கொள்கின்றோம். பொது நிறுவனங்கள், தொழிலாளர்கள், வர்த்தகர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் அரச தனியார் ஊழியர்கள் மற்றும் அனைத்து மக்களும் இப் போராட்டத்தில் பங்கு கொண்டு எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அவ்வறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது. (இ-10)

### இடைக்கால..
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ணம்.

இடைக்கால நிர்வாக சபை நிறுவப்பட்டதும் தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்கவும் மற்றும், புலிகள் விடுத்த கோரிக்கைகளை பெற்றுத்தர இந்திய அரசு ஏற்பாடு செய்ய முயற்சிக்கும் எனவும் இந்திய வட்டாரங்களை ஆதாரங்காட்டி விஷயமறிந்த வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (அ)

### பத்திரிகை..
(1ம் பக்கத் தொடர்ச்சி)
வித்தது.

ஜனாதிபதி ஜெயவர்த்தன இதற்கான உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றுர் என்றும் அச்செய்தி மேலும் தெரிவித்தது. (இ-எ)




அரச அலுவலகங்கள் முன் நேற்று நடத்தப்பட்ட மறியல் போராட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்களைப் படங்களில் காணலாம். (ஒ)
(படங்கள் -ஜெயம்)

## நேற்று நடந்த மறியல் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 17
யாழ் குடாநாட்டில் உள்ள அரச நிறுவனங்கள் முன் நேற்று நூற்றுக்கணக்கான மக்கள் மறியல் போராட்டம் நடத்தினர்.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் வரை மறியல் போராட்டம் கைவிடப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், பாடசாலைகளும் வைத்தியசாலைகளும் வங்கிகளும் வாகனப் போக்குவரத்துகளும் வழமைபோல் நடைபெற்றன. (இ-10)



நேற்று யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட மறியல் போராட்டம் காரணமாக யாழ் செயலகம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

செயலக வாசலில் சுலோக அட்டைகள் தொங்கவிடப்பட்டிருப்பதை படத்தில் காணலாம்.
(படம் - ஜெயம்)

### லலித் இவ்வாரம் வீடு செல்வார்

கொழும்பு, செப். 17
தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி இவ்வார இறுதியில் ஆஸ்பத்திரியில் இருந்து வீடு திரும்புவார்.

ஆஸ்பத்திரி வட்டாரங்கள் இதைத் தெரிவித்தன.

நாடாளுமன்றக் கட்டடத்தில் ஆகஸ்ட் 18 ஆம் திகதி இடம் பெற்ற கிரனேட் தாக்குதலைத் தொடர்ந்து அமைச்சர் அத்துலத் முதலி ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (இ-எ)

### பிரபா..
(1ம் பக்கத் தொடர்ச்சி)
திரு திலீபன் சாகும் வரை உண்ணு விரதம் தொடங்கியுள்ளார்.

மக்கள் உணர்ச்சி வசப்பட்டு வன்முறையில் இறங்காது பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அத்துடன் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் மறியல் போராட்டங்களுக்கும் ஏனைய அகிம்சைப் போராட்டங்களுக்கும் ஆதரவு நல்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## இந்திய இராணுவ---
(1-ம் பக்கத்தொடர்ச்சி)
ரணை நடத்தினர்.

மக்களின் வேண்டுகோளின்பேரில் சம்பந்தப்பட்ட சிப்பாய்கள் பொதுமக்களிடம் மன்னிப்புக் கோரினர்.

சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:

நேற்றுக் காலை மாலிசந்தியில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக மறியல் போராட்டம் செய்வதற்காக ஊர்மக்கள் ஊர்வலமாகச் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது அவ்வீதி வழியாக இந்திய இராணுவத்தினரின் இரண்டு டிரக்குகள் வந்தன.

ஊர்வலமாகச் சென்றவர்கள் மறித்தபோது, அந்த டிரக்குகளில் ஒன்று அவர்களை மோதி விட்டு கடந்து செல்ல முனைந்தது.

இதனால் கரவெட்டியைச் சேர்ந்த கலைச்செல்வி (20 வயது), ஜீவேஸ்வரி (35 வயது) ஆகிய இரு சகோதரிகள் காயமடைந்தனர் இன்னும் இருவர் விபத்திலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினர்.

இதனைத் தொடர்ந்து பின்னால் வந்த டிரக் வழிமறித்துத் தாக்கப்பட்டது. கல்வீச்சினால் இரு இந்திய இராணுவத்தினர் காயமடைந்தனர். சிலர் பொதுமக்களால் கட்டிவைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் புலிகளினால் இந்திய இராணுவ பொறுப்பதிகாரிக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தினர் அந்த இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை செய்தனர் பொதுமக்களை டிரக்கினால் மோதிய சிப்பாய்களுக்கு என்ன செய்யவேண்டும் என்றும் காயமடைந்தவர்களுக்கு நஷ்டஈடு எவ்வளவு தரவேண்டும் என்றும் அவர்கள் கேட்டனர்.

மக்கள் எமக்கு நஷ்டஈடு வேண்டாம் செய்த தப்புக்கு மன்னிப்புக் கேட்கவேண்டுமென ஒரே குரலில் பதில் அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட அனைவரும் மன்னிப்பு கேட்டனர். கட்டிவைக்கப்பட்டிருந்த சிப்பாய்கள் மக்களால் விடுவிக்கப்பட்டனர். (ஒ-160-70)

## சம்மாந்துறை. . .
(1ம் பக்கத் தொடர்ச்சி]
இடத்தில் திரு. விக்னராஜா சுட்டுக் கொல்லப்பட்டார் என்று இலங்கை வானொலி நேற்றுத் தெரிவித்தது.

★ மூதூர் உதவி அரச அதிபர் ஹபீபு முகமது சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக திரு விக்னராஜா சுட்டுக் கொல்லப்பட்டார் என்று சில வட்டாரங்கள் தெரிவித்தன என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

★ திரு. விக்னராஜா தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டார். அதனால் எதிர்ப் போராளி அமைப்புக்கள் அவரைச் சுட்டுக்கொன்றதாக இன்னொரு தகவல் தெரிவிப்பதாகவும் வெரித்தாஸ் வானொலி மேலும் அறிவித்தது (இ-எ)

## புலிகளின் பிராந்திய அலுவலகம் மீது தாக்குதல்

மட்டக்களப்பு, செப் 17
தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை பிராந்திய அலுவலகம் செவ்வாய் இரவு ஆயுத பாணிக் குழு ஒன்றினால் தாக்கப்பட்டது.

சம்பவ தினம் இரவு 9-20 மணியளவில் வான் ஒன்றில் வந்து இறங்கிய இக் குழு துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது.

குழுவினர் அலுவலகம் சென்று ஜன்னல், கதவு ஆகியவற்றை உடைத்து சேதமாக்கினர்உடைமைகளையும் தீக்கிரையாக்கினர்.

இக் குழுவினரின் துப்பாக்கி வேட்டுக்கள் புலிகளின் பெயர்ப்பலகை, ஜன்னல் ஆகியவற்றை துளைத்தன.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் எவரும் அந்நேரத்தில் அங்கு இருக்கவில்லை. இதனால் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

தற்செயலாக அந்த வீதி வழியாக இந்திய அமைதிகாக்கும் படை ரோந்துவர தாக்கிய குழுவினர் சென்றுவிட்டனர்.

இயக்க மோதல்களின் எதிரொலியாகவே இச்சம்பவம் இடம் பெற்றது என்று கூறப்படுகிறது. (இ-21)

### மரணத்தின்-.
(1ம பக்கத் தொடர்ச்சி)
ஞர் '' நீ முன்னே போ நான் பின்னால் வருகிறேன் '' என்று.

இந்த மாபெரும் வீரனின் தலைமையில் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்.

அதன் மூலம் மக்கள் சுதந்திரமான வாழ்வைப் பெறவேண்டும்.

எனது மரணத்தின் பின்னாவது தமிழீழத்தின் உரிமையைப் பெற்றெடுக்க முடியும் என நான் நம்புகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

திலீபனின் உரையைக் கேட்டு அங்கிருந்த பலரும் கண்ணீர் விட்டு கதறி அழுதனர். [இ-10]

### கிளிநொச்சி...
(1ம் பக்கத் தொடர்ச்சி)
தெரியவருகிறது

இதனிடையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா இராணுவ முகாம் இம்மாத இறுதியில் மூடப்படலாம் எனத் தெரியவருகிறது.

பரந்தனில் உள்ள ஸ்ரீ லங்கா இராணுவமுகாம் இரண்டு வாரங்களுக்கு முன் மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ-76-144)

### திலீபன்--
(1ஆம் பக்க தொடர்ச்சி]
ளின் அறிக்கையில் —

சிறுநீரகம் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருப்பதாகவும்—

மேலும் 24மணி நேரத்தில் உடல்நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டு, உடல் உணர்ச்சியற்ற நிலையை அடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் இன்று மூன்றாவது நாளை அடைகிறது.

20 மணித்தியாலங்களுக்கு மேல திரு. திலீபன் சிறுநீர் கூட கழிக்காமல் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நேற்றைய உண்ணாவிரதத்தைப் பார்வையிடவும் உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ளவும் ஏராளமான மக்கள் நல்லூரில் கூடினர்.

வண. பிதா சிங்கராயர் நேற்று திலீபனைப் பார்வையிட்டு உப்புத் தண்ணீராவது குடிக்கும்படி வற்புறுத்தியும் எதுவும் வேண்டாம் என திலீபன் முற்ருக மறுத்துவிட்டார். (இ-10-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org